Registered as a News Paper பக்கங்கள் 6 விலை: ரூபா 5-00

Chundikuli Branch Library Y.M.C.A.

ஈழநாதம்
THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி
நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 07 [22-07-1998] வியாழக்கிழமை ஓசை 154

## புதிய பிரதேச கல்வி அலுவலகங்கள் விரைவில் திறக்க பணிப்பு

புதிய பிரதேச கல்வி அலுவலகங்களை வட கிழக்கில் திறப்பதற்கு தேவையான இடத்தையும் ஆளணியினரையும் தேர்ந்தெடுக்குமாறு வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு எம். ஏ. வி. மொஹைதீன் சகல மாகாண கல்விப்பணிப்பாளர் மாவட்ட கல்விப்பணிப்பாளர், பிரதேச கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளார். அதிகமான ஆசிரியர்களைக் கொண்டுள்ள பிரதேசங்களுக்கு அத்தியாவசியமான ஆளணியினரான கணக்குப் பதிவாளரும், கணக்கு இலிகிதர்களும் அனுப்பப்பட வேண்டும். புதிய பிரதேசங்களில் புதிய அலுவலகங்களை இயங்கச் செய்வதில் ஏதாவது இடவசதிக்குறைவு ஏற்பட்டால் தற்போது உள்ள அலுவலகத்திலேயே தனியான நிர்வாகம் உருவாக்கலாம். அரசாங்கத்துக்குச் சொந்தமான இடங்களிலேயே இவ் அலுவலகங் (6ஆம் பக்கம் பார்க்க)

# தெரிவுக்குழு கலைக்கப்படலாம்!

# 27-ல் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு

(மணிலா)

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண என அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு விரைவில் கலைக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் எழுந்துள்ளதாகவும், இத் தெரிவுக் குழுவின் உத்தியோக பூர்வ இறுதி அறிக்கை இம்மாதம் 27ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதென முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் கூடிய பாராளுமன்ற தெரிவுக்குழு தனது உத்தியோக பூர்வ இறுதி அறிக்கையை ஜூலை 27ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என முடிவு செய்துள்ளது. இக்குழுவிலிருந்து தமிழ், முஸ்லிம் குழுக்கள் வெளியேறிவிட்ட நிலையில் தெரிவுக்குழு தொடர்ந்து கூடுவதில் அர்த்தமேயில்லை என இக்குழுவில் அங்கம் வகிக்கும் சிலர் கருத்து வெளியிட்டுள்ளதாக வெரித்தாஸ்வானொலி தெரிவித்தது

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைக்க சிங்கள அரசியல் கட்சிகள் நேற்றைய கூட்டத்திலும் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வடக்கு, கிழக்கு இணைப்பில் தமிழ் குழுக்கள் உறுதியாக இருப்பதுடன் தமிழ், முஸ்லிம் குழுக்கள் அனைத்தும் தெரிவுக் குழுவை (6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் அரச ஊழியர் மறியல்

(கொழும்பு)

சிறிலங்கா அரசின் அடக்கு முறைக்கு எதிராகவும் நிறுத்திப் பட்டுள்ள சம்பள அதிகரிப்பை உடன் வழங்கக் கோரியும் பல ஆயிரக் கணக்கான அரச ஊழியர்கள் கொழும்பு நகரின் பிரதான சந்திகளில் நேற்று மறியல் போராட்டம் நடத்தினர்.

அரசு திட்டமிட்டு தொழிலாளர் மீது மேற்கொண்டு வரும் அடக்கு முறைகளை உடன் கைவிடவேண்டும், அவசரகால சட்டத்தை நீக்க வேண்டும், ஜனநாயகம் நிலைநாட்டப்படல் வேண்டும், திடீரென இடைநிறுத்தப் பட்ட சம்பளஉயர்வை உடன்வழங்க வேண்டும் என அரச ஊழியர்கள் கோஷமிட்டதாக செய்தி (6ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் செல்லவுள்ள நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

அதிவிசேட சிகிச்சைக்காக கொழும்பு செல்வதற்கு வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களையும் மற்றும் அவர்களுக்கு உதவியாகச் செல்பவர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00மணிக்கு சிபாரிசுக் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் தமது காரியாலயத்தில் சமுகமளிக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். [பா]

## பொதுமகன் ஒருவர் படையினரால் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமகன் ஒருவரை கொடூரமான முறையில் அடித்துப் படுகொலை செய்துள்ளனர்.

மேற்படி சம்பவம் கடந்த 16-ம் திகதி நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றுள்ளது

சிவத்தைப்பாலம் சிறிலங்கா இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரே வந்தாறுமூலை பட்டிக்குடாவைச் சேர்ந்த பொதுமகன் ஒருவரை இவ்வாறு அடித்து கொன்றனர் என தெரியவருகிறது.

## மேலதிக ஆசிரியர்களின் விபரம் அனுப்ப கோரிக்கை

தேசிய பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்கள் இருந்தால் உடன் இது தொடர்பான விபரங்களை கல்விச் சேவைச் சபைக்கு அனுப்பி வைக்குமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கல்விச் சேவைச் சபைச் செயலாளர் திரு. என். வீரரத்ன பணித்துள்ளார்.

அத்துடன் பாடசாலைகளில் ஆசிரியர்களின் தொகையை கணிக்கும் போது பயிலுநர் ஆசிரியர்களையும், பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களையும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் பட்டியலிலேயே சேர்த்து பாடசாலையின் ஆசிரியர் தொகையை கணக்கில் எடுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை உடன் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்ற நடவடிக்கை எடுக்குமாறு அவர் பணித்துள்ளார். (17)

## அதிபர்களின் விபரம் அனுப்பி வைக்க பணிப்பு

1-6-1993 வரையுள்ள காலத்தில் குறைந்தபட்சம் ஒரு வருடத்துக் குறைபாத தொடர்ச்சியான கடமை நிறைவேற்றும் அதிபர்களாக பாடசாலையில் சேவைபுரிந்தவர்களின் பெயர்ப்பட்டியல்களை உடன் அனுப்பி வைக்குமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்

தொடக்கம் 1-6-1993 வரை கடமைநிறைவேற்றும் அதிபர்களாக அல்லது பாடசாலைக்குப் பொறுப்பான உதவி ஆசிரியராக அல்லது அதிபர் பதவியின் கடமையை கவனித்தவரான நிரந்தர அதிபர் பதவியை வகிக்காத நிறைவேற்ற அதிபர்களின் ...

## அனுராவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அனுரா பண்டாரநாயக்காவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இச்சட்டத் தரணிகள் குழு விரைவில் இது தொடர்பாகத் தமது அறிக்கையை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் கையளிப்பர் எனத் தெரிய வருகின்றது

சிறிமா மேற்படி சட்டத் தரணிகளால் வழங்கப்படும் அறிக்கையை மத்திய குழுவிடம் கையளிப்பார் எனவும் மத்தியகுழு அவ் அறிக்கையை ...

## புலமைப் பரிசில் ஆகஸ்ட் 15

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பிற்போடப் பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. ஆகஸ்ட் மாதம் 15ஆம் ...

# 500 தமிழ் இளைஞர் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் சில கிராமங்களை அதிகாலை வேளை திடீரெனச் சுற்றி வளைத்த சிறிலங்கா படையினர் 500ற்கு மேற்பட்ட ஆண்களைக் கைது செய்ததைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

... யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உறவினர்கள் பார்வையிடவோ அவர்களை விடுதலை செய்யவோ இராணுவத்தினர் மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பு பகுதியில் புதியபடை முகாம்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத் ... முகாம்கள் அமைக்கப்பட்டு ...

கல்விச் சேவைச் சபைச் செயலாளர் திரு. என். வீரரத்ன பணித்துள்ளார்.

அத்துடன் பாடசாலைகளில் ஆசிரியர்களின் தொகையை கணிக்கும் போது பயிலுநர் பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை உடன் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்ற நடவடிக்கை எடுக்குமாறு அவர் பணித்துள்ளார். (17)

## அதிபர்களின் விபரம் அனுப்பி வைக்க பணிப்பு

1-6-1993 வரையுள்ள காலத்தில் குறைந்தபட்சம் ஒரு வருடத்துக் குறைபாத தொடர்ச்சியான கடமை நிறைவேற்றும் அதிபர்களாக பாடசாலையில் சேவைபுரிந்தவர்களின் பெயர்ப்பட்டியல்களை உடன் அனுப்பி வைக்குமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கல்விச் சேவைச்சபை கேட்டுள்ளது.

அத்துடன் 1-1-1986 தொடக்கம் 1-6-1993 வரை கடமைநிறைவேற்றும் அதிபர்களாக அல்லது பாடசாலைக்குப் பொறுப்பான உதவி ஆசிரியராக அல்லது அதிபர் பதவியின் கடமையை கவனித்தவரான நிரந்தர அதிபர் பதவியை வகிக்காத நிறைவேற்ற அதிபர்களின் பட்டியலையும் அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (17)

## அனுராவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அனுரா பண்டாரநாயக்காவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இச்சட்டத் தரணிகள் குழு விரைவில் இது தொடர்பாகத் தமது அறிக்கையை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் கையளிப்பர் எனத் தெரிய வருகின்றது.

சிறிமா மேற்படி சட்டத் தரணிகளால் வழங்கப்படும் அறிக்கையை மத்திய குழுவிடம் கையளிப்பார் எனவும் மத்தியகுழு அவ் அறிக்கையை நன்கு ஆராய்ந்த பின் இறுதி முடிவு எடுக்கப்படும் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## புலமைப் பரிசில் ஆகஸ்ட் 15

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதியே பரீட்சை நடைபெறும் முன்னதாக ஆகஸ்ட் 8ஆம் திகதி பரீட்சை நடைபெறவிருந்தமை தெரிந்ததே.

# 500 தமிழ் இளைஞர் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பின் சில கிராமங்களை அதிகாலை வேளை திடீரெனச் சுற்றிவளைத்த சிறிலங்கா படையினர் 500ற்கு மேற்பட்ட ஆண்களைக் கைது செய்ததைத் தொடர்ந்து அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

கடந்த திங்களன்று அதிகாலை 5மணியளவில் மட்டக்களப்பிலுள்ள தன்னா முனை, மொறக் கொட்டாஞ்சேனை, கொம்மாந்துறை கிராமங்களை சிறிலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் இணைந்து திடீரென சுற்றிவளைத்து வீடுவீடாகசென்று அங்கிருந்த இளைஞர்கள், குடும்பஸ்தர்கள் உட்பட 500ற்கு மேற்பட்டோரைக் கைதுசெய்து கொம்மாந்துறை இராணுவ முகாமிற்கு கொண்டுசென்று தடுத்து வைத்துள்ளனர்.

பெருமளவு பொலிசாரும், இராணுவத்தினரும் இணைந்து நடத்திய இத்திடீர் சுற்றிவளைப்பினாலும் கைது நடவடிக்கைகளாலும் பொதுமக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவுவதாகவும் அடுத்த நிமிடம் என்ன நடக்குமோ என்ற நிலையில் மக்கள் வெளியில் நடமாடவே தயங்குவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உறவினர்கள் பார்வையிடவோ அவர்களை விடுதலை செய்யவோ இராணுவத்தினர் மறுத்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மட்டக்களப்பு பகுதியில் புதியபடை முகாம்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் இரு புதிய முகாம்களை நேற்று முன்தினம் அமைத்துள்ளனர்.

மட்டக்களப்பிலுள்ள கன்னன்குடா மண்டபத்தடி என்ற இடத்திலேயே இராணுவத்தினரால் இப் புதிய முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் அமைந்துள்ள பாடசாலையிலும், கோவிலிலுமே இராணுவத்தினர் இப் புதிய முகாமகளை நேற்று முன்தினம் காலை அமைத்துள்ளதாக கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ். குடாவுக்கு வரும் மண்ணெய் போதாது

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா அரசாங்கத்தினால் யாழ் குடாநாட்டு மக்களுக்கு என அனுப்பிவைக்கப்படும் மண்ணெண்ணெயின் அளவு போதாமையினால் பொது மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியாத நிலை நீடிக்கிறது.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு என மாதம் ஒன்றிற்கு ஐயாயிரம் பீப்பா மண்ணெண்ணெய் அனுப்பி வைக்கப்படும் என்று சிறிலங்கா அரசாங்கம் உறுதியாகத் தெரிவித்துள்ள போதிலும் குறிப்பிட்ட அளவிற்கு குறைவான மண்ணெண்ணெயே அனுப்பி வைக்கப்படுகிறது.

இம்முறை றுகுணு கப்பலில் 2100பீப்பா மண்ணெண்ணெய் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், பங்கீட்டு அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்க போதாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்படும் குறிப்பிட்ட அளவு மண்ணெண்ணெயில் 750 பீப்பா மண்ணெண்ணெய்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக முதல்வர் உண்ணாவிரதம்; நேற்றுமாலையுடன் கைவிடப்பட்டது

(சென்னை)

கடந்த நான்கு தினங்களாக உண்ணாவிரதம் இருந்துவந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று மாலை தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டார். நேற்று மாலை 5 30 மணிக்கு தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி வழங்கிய பழச்சாறு அருந்தி ஜெயலலிதா உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். அவ்வேளையில் சென்னை வந்திருந்த மத்திய நீர்வள அமைச்சர் சுக்ளாவும் அங்கு இருந்தார்.

ஜெயலலிதாவின் உண்ணாவிரதம் முடிவுற்றதாக அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவித்ததும் அங்கு கூடியிருந்தவர்கள் ஆரவாரம் செய்தனர்.

சென்னை வந்த மத்திய அமைச்சர் சுக்ளா முதலமைச்சர் ஜெயலலிதா, ஆளுநர் ரெட்டி ஆகியோருடன் நேற்று பேச்சுக்கள் நடத்தியதையடுத்து சிலஉறுதி மொழிகளை வழங்கியுள்ளதாகவும் அதன் அடிப்படையில் ஜெயலலிதா உண்ணாவிரதத்தை கைவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காவிரி நதிநீரை நடுவர் மன்ற தீர்ப்பின்படி தமிழகத்திற்கு வழங்குமாறு கோரி ஜெயலலிதா கடந்த ஞாயிறு தனது உண்ணாவிரதததை ஆரம்பித்தார்.

உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்ட முதலமைச்சர் ஜெயலலிதா செய்தியாளர்களிடையே பேசும் போது, காவிரிநடுவர்மன்ற ஆணையை நடைமுறைப்படுத்துவது குறித்து கண்காணிக்க மத்திய அரசு கண்காணிப்பு குழு ஒன்றை அமைக்க ஒத்துக் கொண்டதாக தெரிவித்தார்.

கடந்த இரு வருடங்களாக நடுவர் மன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்தவும், கண்காணிக்கவும் அமைப்பு ஏதும் இல்லா நிலையில் இடபோது இந்த குழு அமைக்கப்படுவது தமிழகத்திற்கு கிடைத்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரத போராட்டம் ஜெயலலிதாவிற்கு தோல்வி

### பி. பி, ஸி. விமர்சனம்

(லண்டன்)

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான நடுவர் மன்ற தீர்ப்பை கண்காணிக்க மத்திய அரசு குழு ஒன்றை அமைக்கும் என்ற ஓர் உறுதிமொழியை தவிர வேறு எதையும் தனது 80 மணிநேர உண்ணாவிரதத்தினால் ஜெயலலிதா பெறவில்லை. இவ்வாறு ஜெயலலிதாவின் உண்ணாவிரதப் போராட்டம் குறித்து கருத்து வெளியிட்ட பி. பி. ஸியின சென்னை செய்தியாளர் தெரிவித்தார்.

மேலும் கர்நாடக அரசோ காவிரி நதிப்பகுதியில் போதிய மழை பெய்யவில்லை என்ற காரணத்தால் நதிநீரை பங்கிட முடியாது என பிடிவாதமாக உள்ளது ஜெயலலிதாவின் உண்ணாவிரதத்தால் தமிழ் நாட்டில் இயல்புநிலை பாதிக்கப்பட்டது. மத்திய அரசின் சொத்துக்கள் அ. தி. மு. க. தொண்டர்களால் சேதமாக்கப்பட்டன. இவற்றை நிறுத்தவும் ஜெயலலிதா உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள ஒரு வாய்ப்பாக ஏதேனும் ஒன்றை வழங்கவும் அமைச்சர் சுக்ளாவின் உறுதிமொழி

(6ஆம் பக்கம் பார்க்க)

## மழையைப் பொறுத்தே தமிழகத்துக்கு தண்ணீர்

### கர்நாடக முதல்வர் உறுதியாக தெரிவிப்பு

[சென்னை]

கர்நாடக முதலமைச்சர் வீரபப மொளலி காவிரி நீர் விநியோகம் தொடர்பாக மத்திய நீர்வள அமைச்சர் வி. சி. சுக்ளா அறிவித்த முடிவை ஏற்க மறுத்து விட்டார்.

காவிரி நடுவர் மன்றின் இடைக்காலத் தீர்வை அமுல் படுத்த கண்காணிப்புக் குழுவை அமைப்பது கர்நாடக அரசுக்கு ஏற்புடையதல்ல என்று முதலமைச்சர் வீரப்ப மொளலி தெரிவித்தார்.

அமைச்சரவை உபகுழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

காவிரியில் இருந்து தமிழ் நாட்டிற்கு நீர் வழங்குவது பருவ மழையில்தான் தங்கியுள்ளது என்று கூறிய வீரப்ப மொளலி, மத்திய நீர்வள அமைச்சர் அமைத்த கண்காணிப்புக் குழுவிற்கு கர்நாடக அரசு எவ்வித ஒத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபருடன் தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மாதகல், காங்கேசன்துறை, இளவாலை மற்றும் தீவுப் பகுதிகளில் தொழில்புரிந்த ஆசிரியர்கள் மற்றும உத்தியோகஸ்தர்களுக்கு சம்பந்தப்பட்ட ஏதாவது திணைக்களம் சம்பளப் பட்டியல் தயாரித்து சம்பளம் வழங்கியிருப்பின் அந்தந்த திணைக்களத்தலைவர்கள் யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். [பா]

## இடைநிறுத்தத்தை நீக்குமாறு;

# அனுரா விடுத்த கோரிக்கை சிறிமாவினால் நிராகரிப்பு

அனுரா பண்டாரநாயக்கா கட்சியிலிருந்து நீக்கப்பட்டதை மீளப் பெறுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சி தலைவிக்கு மிகவும் நெருக்கமானவர்களும், கட்சி உறுப்பினர்கள் சிலரும் நேற்று முன்தினம் றோஸ்மீட் பிளேசில் இவரை சந்தித்து இவ் வேண்டுகோளை விடுத்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சந்திப்பின்போது தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்காவின் இடை நிறுத்தத்தை வாபஸ் பெறுமாறு வேண்டுகோள் விடுத்ததாகவும், இதனை கட்சி தலைவி மறுத்துவிட்டதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கடந்த காலங்களில் அனுரா பண்டாரநாயக்க கட்சியின் கொள்கையையும், சட்டவிதிகளையும் மீறி செயல்பட்டமை தொடர்பாக விசாரணை ஒன்று நடத்தப்படும் என்றும் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் மத்தியகுழுத் தீர்மானத்திற்கு எதிராகச் செயற்படுவது கட்சியின் அனேகரின் விருப்பத்திற்கு எதிராகச் செயற்படுவதாக அமையும் என்று தம்மை சந்தித்த குழுவினருக்கு சிறிமாவோ பண்டாரநாயக்கா எடுத்துக் கூறியதாக தெரியவந்துள்ளது.

## வரி விளம்பரம்

### சுவிற்சர்லாந்தில் கண்காட்சி

பழமை வாய்ந்த Wyler Invicta West-end Damas Rolex போன்ற தங்க நிறக் கடிகாரங்கள் சுவிற்சர்லாந்தில் கண்காட்சிக்கு அனுப்புவதற்காக நியாயமான விலைக்கு எம்மால் வாங்கப்படும். (பழுதடைந்த நிலையிலுள்ள கடிகாரங்களானாலும் சரி) டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284. ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [சி/7032)

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள். லேஸ், நூல் வகைகள், எவர் சில்வர் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள-ஜெயா அழகுசாதன மாளிகை, 177-A, மின்சார வீதி, யாழ்ப்பாணம். (சி 6968)

### தவறிவிட்டது

18-7-93 ஞாயிற்றுக்கிழமை ஒருவருடைய கைச்செயின் (பவுண்) நாவற்குழி சந்திக்கும் கைதடி பிள்ளையார் ஆலயத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது கண்டு எடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும். (சி-7053)

### எரு விற்பனை

எமது பண்ணையில் எரு விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் பார்வையிட்டு 30 07 93ம் திகதிக்குமுன்னர் கூறுவிலை சமர்ப்பித்துப்பெற்றுக் கொள்ளலாம். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-7054)

### பசுமாடு விற்பனை

எமது பண்ணையில் உள்ள பிறிசியன் இனப் பசு (இல. 8) விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் பார்வையிட்டு 30 07 93க்கு முன்னர் கூறு

# ஏமாற்றிப் பணம் பறிப்பது கொழும்பு நகரில் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் ஐ ஆர் சி பேர் வழிகளினதும், போலி சி ஐ டிக்களினதும நடமாட்டம் பெருமளவில் அதிகரித்திருப்பதால் தமிழர்கள் குறிப்பாக இளைஞர்களும், யுவதிகளும் வீதியுடனேயே வெளியில் காலடி எடுத்து வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து கொழும்புக்கு வரும் தமிழர்கள் பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக மனதில் ஏற்பட்டிருக்கும் சஞ்சல உணர்வைப் பயன்படுத்தி இத்தகைய பேர்வழிகள் பணம் மற்றும் நகைகள் பறிப்பதில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

கொட்டாஞ்சேனை பகுதியில் கடந்த ஒருவாரத்தில் மட்டும் இத்தகைய பல சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் இவை பொலிசாருக்கு பெரும் சவாலாகியிருப்பதாகவும்மேலும் கருதப்படுகின்றது.

கடந்த வெள்ளியன்று கொட்டாஞ்சேனை சென்றல்வீதியில் பட்டப்பகலில் மோட்டார் சைக்கிளில்வந்த இருவர் தமிழ் தம்பதியரிடமிருந்து பதி தாயிரம் ருபாவை அபகரித்துச் சென்றுள்ளனர் இதே போன்ற மற்றுமொரு சம்பவத்தில் தமிழ் மூதாட்டி ஒருவரும் பணத்தை பறிகொடுக்க நேர்ந்துள்ளது.

இதேவேளை கேடிகள் மற்றும் போலி சி. ஐ. டிக்கள் தவிர நகரில் டாம்பீக வாழ்வு நடத்தும் இளைஞர்கள் பலரும் "சோதனைத்தொழிலில்" ஈடுபட்டிருப்பதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

### தினமும் 33 வீதி விபத்துக்கள்

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மட்டும் தினசரி 33 வீதி விபத்துக்கள் இடம் பெறுவதாக போக்குவரத்துப் பொலிஸார் கூறியுள்ளனர்.

பம்பலப்பிட்டி கறுவாக்காடு மற்றும் கொள்ளுப்பிட்டி பகுதிகளிலேயே அதிக அளவில் வீதி விபத்துக்கள் ஏற்படுவதாகவும் பொலிசார் மேலும் கூறுகின்றனர்.

## சிந்தனைத் துளிர்

(நெல்லியடி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மாதந்தோறும் நடாத்தும் "சிந்தனைத் துளிர்" கல்வி ஆண்டு நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றது.

திரு இ. இராசநாதன் தலைமை வகித்த இவ் வைபவத்தில், வடமராட்சிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். செல்லத்துரை பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. பீ. பாலசிங்கம் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். ஏகாம்பரநாதனும் கலந்து சிறப்பித்தனர். (30)

# பயிலுநர் ஆசிரியர்களுக்கு வங்கியில் சேமிப்புக் கணக்கு

வட கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு மூலம் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டு கடமையாற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கும் மாதாமாதம மத்திய கல்வி அமைச்சு பயிலுநர் ஆசிரியர்களுக்கு சேமிக்கப்படும் உதவு தொகை ரூபா 100/- சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்பட வேண்டும் என மத்திய கல்வி அமைச்சு வட கிழக்குமாகாண கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளது

இதனடிப்படையில் வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இருந்து சகல கோட்டங்களுககுப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதப்படி இவ்வாறு நியமனம் செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்கள் விபரத்தையும அவர்களுக்கான உதவு தொகைக்குரிய காசோலைகளை தமக்கு அனுப்பி வைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது. இப்பட்டியலை அனுப்பும்போது மத்திய கல்வி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கு மத்திய கல்வி அமைச்சின் மூலம் சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப் படுவதனால் அவர்களுடைய பெயர்களை சேர்க்காமல் விடுமாறும் மேலும் பணித்துள்ளது. (17)

## அளவெட்டி சைவ வாலிப சங்கம் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

மேற்படி சங்க ஆதரவில் அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றுவரும குருபூசை இவ்வருடமும் வழமைபோல 26 07 93 திங்கட்கிழமை நடைபெறும். குருபூசைக்கு தேவையான பண உதவி. பொருள் உதவிகளை ஆலய காரியாலயத்தில் சமர்ப்பித்து பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளும்படி அடியார்கள், அன்பர்களை தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.

## பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

யாழ். உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள நாவாந்துறை ரமேஸ் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் 23ஆம் திகதி வெள்ளி பிற்பகல் 1 00 மணியளவில்

லலித்தின் மெய்ப்பாதுகாவலர்

# சாட்சியம் அளிக்காமைக்கு ஐ. ஐ. தே. மு. காரணம்

– ஸ்கொட்லன்ட்யார்ட்

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் மெய்ப்பாதுகாவலராக இருந்த சாந்த விசாரணைக் குழு முன்பாக ஆஜராகி சாட்சியமளிக்க தவறியமைக்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியே காரணம் என்று ஸ்கொட்லன்ட் யார்ட் புலனாய்வுக்குழு கூறியுள்ளது.

ஸ்கொட்லன்ட்யார்ட் புலனாய்வுக் குழுவினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த லலித்தின் மெய்ப்பாதுகாவலராகவிருந்த திலக் சாந்தவை சந்திக்கச் சென்றபோது வைத்தியர்களின் ஆலோசனைக்குப் புறம்பாக -சொந்த விருப்பத்தின் பேரில் அவர் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருப்பதைக் கண்டு திகைப்புற்றனராம்.

அநுரா உட்பட பா. உக்களிடம்

# வாக்குமூலம் பெறுவதற்கு சபாநாயகரிடம்முன் அனுமதி

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின்பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவின் பொரல்ல இல்லத்தின் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைநடத்திவரும் குற்றப் புலனாய்வு பணியகத்தைச் சேர்ந்த அதிகாரிகள்சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வாககு மூலங்களையும் பதிவு செய்யவுள்ளனர். இதற்காக சபாநாயகர் எம். எச். முகம்மதுவின் அனுமதியை பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அநுரா பண்டாரநாயக்க கட்சியிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்ட அதேதினத்தில் கட்சியின் செயலாளர் வீட்டின் முன்பாக பெல்ஜியத் தயாரிப்பான கைக்குண்டு ஒன்று இனம்தெரியாதோரால் வெடிக்க வைக்கப்பட்டது தெரிந்ததே

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவர் மேலும் கூறுகையில், அநுரா பண்டாரநாயக்க உட்பட சுதந்திரக் கட்சியை சேர்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குமூலங்களும் பதிவு செய்யப்படவுள்ளது என்றும், இச்சம்பவம் தொடர்பாக சுமார் 25 பேரின் வாக்குமூலங்கள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.

## நெருப்புக் காய்ச்சல்

(காரைதீவு)

காரைதீவு அகதி முகாம்களை அண்டியுள்ள சூழலில் நெருப்புக்காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றது. அகதிகளுக்கான அடிப்படை வசதிகள் இல்லாது இருப்பதும், மற்றும் மலசலகூட வசதிகள் இல்லாமல் இருப்பதும், கிணறுகளுக்கு குளோரின் போடப்படாமல் இருப்பது போன்றவையும் இந்நோய் பரவக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை காரைதீவு வைத்திய சாலையிலுள்ள அம்புலன்ஸ் வண்டி, மற்றும் குளிர் சாதனப்பெட்டி என்பவையும் பழுதடைந்துள்ளன.

## நினைவு கூருகின்றோம்... 1993-07-22

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ **கீர்த்தி** (சாமித்தம்பி புவிராஜகீர்த்தி- தம்பிலுவில்-அம்பாறை)

மட்டு - ஆரையம்பதிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட்உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2-ம லெப். விவே** (சாமித்தம்பி உதயச்சந்திரன் - ஆரையம்பதி 01 - மட்டு)

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**குமா** [சுப்பையா தனபாலசிங்கம் - தண்ணீர்த்தாங்கியடி முருங்கன் - மன்னார்]

1988ஆம் ஆண்டு மட்டு - நெல்லிக்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**செந்தூரன்** [ஆறுமுகம் கணேசமூர்த்தி - 40-ம் கிராமம் மட்டு)

**முருகன்/பரிலன்** (சாமித்தம்பி முருகமூர்த்தி - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டு)

**சைமன்** [வீரக்குட்டி நேசகுமார் - இலுப்பையடிச்சேனை. செங்கலடி - மட்டு]

1989ஆம் ஆண்டு சாவகச்சேரிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். ஆஷா ஈசன்** (வல்லிபுரம் விமலேஸ்வரன் - சரசாலை வடக்கு -, சாவகச்சேரி]

திருமலை - ஆலங்கேணி, சுள்ளிமுறித்தான் தீவுப்பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்

கிளிநொச்சியில் இந்தியப் படையினரால்சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுமி. இரணைமடு சந்திக்கு அண்மையில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு ஆனையிறவு - குறிஞ்சாத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**தசரதன்/தாகன்** [செல்லையா குமாரவேல் - குருநகர்-யாழ்]

கிளிநொச்சி - பரந்தன், முரசுமோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய-

**லெப். சிட்டன்** [வேலாப்போடி தர்மலிங்கம் - தன்னாமுனை - மட்டு]

**டெனா** (வல்லிபுரம் யோகேஸ்வரன் - வவுனியா)

கிளிநொச்சி மாவட்ட மகளிர் பிரிவுப் பொறுப்பாளர்-

**கப்டன் பிரபா** [தாரணி திருநீலகண்டன் - மயிலிட்டி]

**2-ம் லெப். தங்கப்பா** [வீரகுலசிங்கம் செல்வநாயகம்-செல்வவிநாயகம் வீதி, தொண்டமானாறு]

**முத்து** [தெய்வேந்திரம் மகேந்திரன்- காமாட்சிகோயிலடி, காரைநகர்-யாழ்]

யாழ் - வசாவிளான் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். தேவன்** [சின்னத்தம்பி மகாதேவன் - ஒதியமலை, நெடுங்கேணி மணலாறு]

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனானநேரடிச் சமரின்போதுவீரச்சாவெய்திய-

**சீலன்** [மெய்யப்பா தர்மரெட்ணம் - மன்னார்]

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய

**பிறேம்நாத்** (சீனிவாசகம் கௌரிநாதன்-திருக்கோயில்-அம்பாறை)

**இந்திரன்** (சண்முகம் பாஸ்கரன்-வீசம்கேணிவீதி, கிரான்-மட்டு)

**2-ம் லெப். சண்** [கிருஷ்ணசாமி கணேஷ்-றிக்லேன் டிவிசன்-மடுக்கல்]

**லெப். அசோக்** [வைத்திலிங்கம் கணேஸ்குமார்-கண்டி வீதி, மாங்குளம்]

**லெப். ஜேம்சன்** [சாந்தையா ராமு-இந்திபுரம், முறிகண்டி-கிளிநொச்சி]

றுக் கொள்ளலாம். பொது முகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-7054)

## பசுமாடு விற்பனை

எமது பண்ணையில் உள்ள பிறிசியன் இனப் பசு (இல. 8) விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் பார்வையிட்டு 30 07 93க்கு முன்னர் கூறு விலை சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம். (சி-7055)

மேற்படி சங்க ஆதரவில் அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றுவரும குருபூசை இவ்வருடமும் வழமைபோல 26 07 93 திங்கட்கிழமை நடைபெறும். குருபூசைக்கு தேவையான பண உதவி. பொருள் உதவிகளை ஆலய காரியாலயத்தில் சமர்ப்பித்து பற்றுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளும்படி அடியார்கள், அன்பர்களை தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.

அள. சைவ வாலிப சங்க
நிர்வாகிகள்
(5436)

## விளையாட்டுப் போட்டி

(தொல்புரம்)

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

யாழ். உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள நாவாந்துறை ரமேஸ் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் 23ஆம் திகதி வெள்ளி பிற்பகல் 1 00 மணியளவில் சென்னடி சனசமூக நிலைய முன்றலில் நிலையத் தலைவர் சி சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

(41)

கொள்ளப்பட்டுள்ளன.

அநுரா பண்டாரநாயக்க கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட அதேதினத்தில் கட்சியின் செயலாளர் வீட்டின் முன்பாக பெல்ஜிபத் தயாரிப்பான கைக்குண்டு ஒன்று இனம்தெரியாதோரால் வெடிக்க வைக்கப்பட்டது தெரிந்ததே

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருக்கும் பொலிஸ் அதிகாரி ஒருவர் மேலும் கூறுகையில், அநுரா பண்டாரநாயக்க உட்பட சுதந்

நெருப்புக்காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றது. அகதிகளுக்கான அடிப்படை வசதிகள் இல்லாது இருப்பதும், மற்றும் மலசலகூட வசதிகள் இல்லாமல் இருப்பதும், கிணறுகளுக்கு குளோரின் போடப்படாமல் இருப்பது போன்றவையும் இந்நோய் பரவக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை காரைதீவு வைத்திய சாலையிலுள்ள அம்புலன்ஸ் வண்டி, மற்றும் குளிர் சாதனப்பெட்டி என்பவையும் பழுதடைந்துள்ளன.

# மீளாத்துயரில் 90 நாள்



## செல்லர் தருமராசா (செந்தில்)

## தருமராசா வதனா (வாசினி)

தோற்றம் 1958-08-20 தோற்றம் 1969-02-29

மறைவு: 1993-04-22

| | | | |
|---|---|---|---|
| சிருடன் | சிறப்பாகக் | கோண்டாவில் | பதியிலே |
| பேருடன் | வாழ்ந்த | பெருமைமிகு | செந்தில் |
| யாருடனும் | பகையின்றி | நேயமுடன் | வாழ்ந்தாய் |
| வேருடன் | புவி நீங்கி | வதனாவுடன் | சென்றாய் |
| ஊருக்கு | நீ செய்த | உதவிகள் | நிலைநிற்கும் |
| பாருக்குள் | உன் நாமம் | பெரிதாக | நிற்கும். |

''பணத்திற்கு நீ தலைவனாய் இருந்தால் அதை நல்ல செயல்களுக்குப் பயன் படுத்துவாய்! அதற்கு நீ அடிமையாய் இருந்தால் அது உன்னைத் தீய செயலகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும்.''

- அகஸ்டைன்

தேற்றுவாரின்றி தெருவிலே நிற்கும்

(5433) கு. கந்தசாமி, கு. சித்திரா, க கஜீவன்.

# 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியல்
01
—
09
—
1946



ஆண்டவன் நிழலில்
22
—
06
—
1993

## திரு. ஜேம்ஸ் அந்தோனிப்பிள்ளை

[முத்துராசா]

எங்கள் அன்புத் தெய்வமே பண்பின் சிகரமே
குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்தீரே!
ஈடு செய்ய முடியாத உங்கள் பேரிழப்பை
நம்ப மனம் மறுக்கின்றது.
எத்தனை யுகம் சென்றாலும் அப்பா உங்கள்
பிரிவை ஆற்ற முடியாது
மீண்டும் வரமாட்டீர்களா என்று
மனம் ஏங்குகிறது.
மரம் சாய்ந்தால் கிளைகள் தளிர்க்க முடியுமா.
அப்பா உங்கள் அன்பையும் அரவணைப்பையும்
இனி எங்கு காண்போம்.
உங்கள் பிரிவால் சிந்தும் கண்ணீரையே
காணிக்கை ஆக்குகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய 22-7-1993 [இன்று] மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் வருந்தும்

மணற்காடு,
குடத்தனை.
(5443)

மனைவி, மக்கள், தாய், மாமி,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

சீலன் [மெய்யப்பா தர்மரெட்ணம் - மன்னார்]

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து முன்னேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய

பிறேம்நாத் (சீனிவாசகம் கௌரிநாதன்-திருக்கோயில்-அம்பாறை)

இந்திரன் (சண்முகம் பாஸ்கரன்-வீசம்கேணிவீதி, கிரான்-மட்டு)

2-ம் லெப். சண் [கிருஷ்ணசாமி கணேஷ்-றிக்லேன் டிவிசன்-மடுக்கல்]

லெப். அசோக் [வைத்திலிங்கம் கணேஸ்குமார்-கண்டிவீதி, மாங்குளம்]

லெப். ஜேம்சன் [சாந்தையா ராமு-இந்திபுரம், முறிகண்டி-கிளிநொச்சி]

மேஜர் ரெட்ணராஜ்/ரெட்டி [தம்பிப்பிள்ளை அந்தோனிதாஸன்- மருத்துவமனைவீதி-மன்னார்]

லெப். விஜயன் [வேலுப்பிள்ளை மாரிமுத்து-கொட்டடி-யாழ்]

லெப். திலக் [சேதுலிங்கம் கிருஷ்ணவரதன்-ஆதிகோவிலடி-வல்வெட்டித்துறை]

லெப். அன்பன் மாஸ்ரர்/சிறீஅப்பா [செ.முருகராசாசிறிதர் தீருவில ஒழுங்கை-வல்வெட்டித்துறை]

2-ம் லெப். எழில் [சந்திரசேகரம் சசிதரன்-மயிலங்கூடல், இளவாலை-யாழ்]

சிவானி [றோகினி சண்முகநாதன்-பொற்பதிவீதி, கொக்குவில் கிழக்கு-யாழ்]

வில்சன் (வேலுப்பிள்ளை சந்திரகுமார்-வடலியடைப்பு, பண்டத்தரிப்பு-யாழ்)

கைலன் (அரியரட்ணம் குசந்தன்-வட்டு மேற்கு, வடடுக்கோட்டை-யாழ்)

நிஷாந்தன் (அருளானந்தம் யூட் அன்ரனி-நெடுந்தீவு, மததி - யாழ்)

மணிவாசன் (கணேசநாதன் ஜனார்த்தனன்-மாவீரர்வீதி, இணுவில் கிழக்கு-யாழ்)

சங்கன் (சுப்பிரமணியம் கருணாநிதி – சிவன்கோயிலடி வீதி-எழுதுமட்டுவாள்)

சிவமூர்த்தி (மகாலிங்கம் சதீஸ்வரன்- 2-ம் வட்டாரம் புங்குடுதீவு-யாழ்)

வவுனியா சூடுவெந்தபுலவில் சிறிலங்கா இராணுவக் காவலரண தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

லெப். பாண்டியன் (செல்லையா சிவதாஸ்-வேப்பங்குளம் ஓமந்தை-வவுனியா)

ஜீவா (அஞ்சரன் மேகன் கரடிப்பூவல-புத்தளம்)

1992ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் எதிர்பாராதவிதமாக ஏறபட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் எமைப்பிரிந்த,

நக்கீரன் (சங்கரலிங்கம் செந்தில்குமரன்-நாயன்மார்கட்டு -யாழ்)

திருமலை-சம்பர் இலக்கந்தை பாட்டாளிபுரம் பகுதிகளைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோது சிறிலங்கா இராணுவம் சுட்டதில் கொக்கட்டிச்சோலையைச்சேர்ந்த இளைஞன் பலி.

கிழக்கில் முஸ்லீம்களால் ஏற்பட்ட வன்செயல்களால் கொல்லபபட்ட தமிழ்ச்சாரதி, வாழைச்சேனையில் சடலங்களாக மீட்கப்பட்ட இருவர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-7051)

## தர்மசிறி வீட்டின் மீதான தாக்குதல்

# பாதுகாப்புப் படைகளின் பாவனையிலுள்ள கிரனேட்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவின் பொரளை இல்லத்தின் மீது கடந்த வியாழனன்று இரவு எறியப்பட்ட கிரனேட், சிறிலங்கா படைகள் பாவிக்கும் கிரனேட் ரகத்தைச் சேர்ந்தது என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் ருக்மன் டி சில்வா தெரிவித்தார்.

கிரனேட்டின் ஊசியைப் பரிசோதித்தபின், விசாரணை மேற்கொண்டு வரும் பொலிஸ் அதிகாரிகள் தர்மசிறி சேனநாயக்க வீட்டின் மீது வீசப்பட்ட கிரனேட் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளின் பாவனையில் உள்ள கிரனேட் போன்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

கேகாலை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் தர்மசிறி இரவு 9-30 மணியளவில் குண்டு வீசப்பட்ட போது அவர் வீட்டில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. வெளியில் நிறுத்தி வைக்கப்பட்ட காரும், வீட்டு ஜன்னல்கள் மட்டுமே சேதமடைந்தன.

இச் சம்பவம் தொடர்பாக 60 பேர் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

## பூச்சித் தடுப்பு வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நவாலி வடக்கு சண்முகசுந்தரம் சிறுவர் அறிவாலயத்தில் பயிலும் மாணவச் சிறுவர் சிறுமியர் முப்பத்தேழு பேருக்கு பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவினால் பூச்சித் தடுப்பு மருந்து வழங்கப்பட்டது.

இதனையடுத்து பொதுச் சுகாதார பிரிவினரால் போசாக்கு, குடும்பநலன் பற்றிய விரிவான கருத்தரங்கும் நடாத்தப்பட்டது. இதில் மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (05)

## பரீட்சை காகிதாதிகள் குமாரியில் வந்தன

யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குரிய காகிதாதிகள்நேற்றுமுன்தினம் எடுத்து வரப்பட்டன. 'குமாரி' கப்பல் மூலம் பரீட்சை விடை எழுதும் தாள்கள் மற்றும் பரீட்சைக்கான முக்கிய காகிதாதிகள் பலவும் வந்தன. ஆகஸ்ட் 2 ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாக இருப்பது தெரிந்ததே. (யோ)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 15 - 11 - 1970 | 15 - 07 - 1991 |

## வீரவேங்கை கரிகாலன்

(மாப்பாணர் உதயகுமார்)

[ஆனையிறவுச் சமரில் வீரச்சாவெய்தினார்]

திதி: 22-07-93

தமிழ்த்தாயின் பாலுண்டு வளர்ந்தாய்
தமிழீழ மண்ணில் தவழ்ந்தாய்,
தலைவனின் வழியினில் நடந்தாய்
களம் பல கண்டாய் எதிரியை வென்றாய்
கரிகால! நீ மறைந்து விடவில்லை
வாழ்கின்றாய் மாவீரனாய்.

இன்று எமது இல்லத்தில் வழங்கவிருக்கும் மதியபோசனத்தில் சக போராளிகளையும். உறவினர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உதயகுமார் வீதி (கரிகாலன்),
ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.

- குடும்பத்தினர்

(5428)

# பொலிஸ் திணைக்களத்தில் பல முக்கிய மாறுதல்கள்

இந்த வாரம் முதல் சிறிலங்கா பொலிஸ்திணைக்களத்தில் முக்கிய மாறுதல்கள் அமுலுக்கு வரவுள்ளன.

இதன்படி பிரதமரின் பாதுகாப்புக்கென இதுவரைசெயற்பட்ட தனிப்பிரிவு தேசிய புலனாய்வு பணியகத்தின் கீழ் கொண்டுவரப்படும். போதைப் பொருள் தடுப்பு பணியகம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டு அதன் தலைவராக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அன்டன் ஜெயநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் பண்டார ஜெயசுந்தர மட்டக்களப்பிலிருந்து செயற்படும்படி கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமனம் பெற்றுள்ளார். பிரதிப் பொலிஸ்மா அதிபர்போதிபாலலியனகே வடமேல் மாகாணத்திற்கும், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ சி ஏ. கபூர் சப்பிரகமுவ மாகாணத்திற்கும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பதவி வெற்றிடம்

இப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து 1993-08-20 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி : சுகாதாரத் தொழிலாளி (தாழ்தரம)

சம்பளத் திட்டம் : ரூபா 1775 - 8x30- 2015/- மாதமொன்றுககு.

(இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் 18% சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்).

தகைமைகள் :

1. மலசலகூடங்கள், வடிகால்கள் முதலியவற்றைச் சுத்தமான முறையிலபேணுவதில்திறமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
2. வயது — விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேணடும்.

தெரிவு: தொழிற்பரீட்சை மூலமும நேர்முகப் பரீட்சை மூலமும்.

குறிப்பு : உணவு முத்திரை பெற்றுள்ளகுடும்ப அங்கத்தவருக்கு முன்னுரிமைவழங்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/-ஐ நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் 23 x 10 ச. மீ. அளவுடையதும், சுய முகவரியிடப்பட்டதும், ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-07-19

(சி-7043)

## ஆண்டு நான்கிலும் அழியாத நினைவுகள்



# 3-ம் ஆண்டு நினைவு நாள்



தாயின் மடியில்

1969. 09. 05

தமிழீழ மண்ணுக்காய்

1990. 07. 22

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



# லெப்டினனட் ஆஷா

## வல்லிபுரம் விமலேஸ்வரன் (ஈசன்)

தாயகத்தாய் மடியில்
**11-01-1969**

தமிழீழத்தாய் விடிவில்
**22-07-1989**

தம்பி! நின்வாழ்வில் இந்நாள் மறந்திட முடியா நன்னாள்!
இந்தநல் மண்ணிற்றோன்றி எய்திய பயனாம் பொன்னாள்!
அந்தமில் புகழைத் தேக்கும் ஆக்கமே நிலையாம் என்று
சிந்தையில் உணர்வு கொண்டு சேர்ந்தாயோ களத்தையன்று!

''பெற்றதாம் உடலின் பேற்றைப் பெற்றேனே! இன்று'' என்பாய்
''பற்றியே பகைவர் கூட்டைப் பதறடித்திடுவேன்'' என்பாய்
''எற்றியே அடிப்பேன் பந்தாய் எதிரிகள் தலையை'' என்பாய்
உந்தனின் மகிழ்வைக் கூற உலகினில் மொழியேயில்லை

ஊரெல்லாம் திரண்ட நம்வீரர் ஓங்கிய நடையுடன் - நீங்கள்
போர்க்களம் நோக்கிச் சென்ற பெருமிதச் செயலும் கண்டோர்
வீரரில் இவரை விஞ்ச வீரரும் உளரோ? என்று
மார்பினிற் பெருமை மீற மகிழ்வுடன் கேட்டார் நம்மை

இந்திய ஈழப்போரில் அண்ணை பாதத்தில் பதிந்த உன்னை
ஆலமும் நாணும் பொல்லா அலிகள் அந்நாய்கள் அன்று
சிந்திய குருதியோடு உன்னைச் சுற்றியே வளைத்துக் கொன்று
மானத்திற் கூறுசெய்தார்? மறப்போமா? மறத்தமிழர் நாங்கள்

நல்லவன் மானங் காப்பான்! நமக்கிதில் ஐயம் இல்லை!
வல்லதாம் புலியின் தோன்றல்! வகையற்றுப் புல்லுண்ணாதே!
வழுவில்லை உந்தன் சாவில்! வானமும் மண்ணும் வாழ்த்தும்!
விடியலைத் தேடிய வீரனே! முடிவொன்று பிறக்கும் நாளை!

– ஆஷா குடும்பத்தினர்.

''தாயகம்'',
''சமுத்திரதாரா'',
சரசாலை.

(5407)

---

## 3-ம் ஆண்டு நினைவு நாள்



தாயின் மடியில்
1969. 09. 05

தமிழீழ மண்ணுக்காய்
1990. 07. 22

முன்னாள் கிளிநொச்சி மாவட்ட
மகளிர் முன்னணிப் பொறுப்பாளர்
**கப்டன் பிரபா**
(திருநீலகண்டன் தாரணி)

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய போராளிகளுக்கும் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

மயிலிட்டி – குடும்பத்தினர்

(5441)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மைந்தனாக
23-05-1974

மாவீரனாக
22-07-1991

**வீரவேங்கை வில்சன்**
[வேலுப்பிள்ளை சந்திரகுமார்]

தாயை நிகரெங்கள்
தாயகத்தை காதல் செய்தாய்!
தூய தலைவனின் அடிச்சுவட்டில்
துணிவுடனே நீ நடந்தாய்!!
ஓயுதல் செய்யோம் - உன்
இலட்சியம் ஈடேறும் வரையில்.

நயவஞ்சகரால் அழிக்கப்பட்ட தந்தை மற்றும் வில்சனுடன மாவீரரான அனைத்து போராளிகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.
(5419)

அம்மா, அக்கா,
அத்தான், அண்ணாமார்,
மருமக்கள்.

---

சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்).

தகைமைகள் :

1. மலசலகூடங்கள், வடிகால்கள் முதலியவற்றைச் சுத்தமான முறையிலபேணுவதில்திறமை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

2. வயது — விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

தெரிவு: தொழிற்பரீட்சை மூலமும நேர்முகப் பரீட்சை மூலமும்.

... தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-07-19

(சி-7043)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை லெப்.திலக்**
[சேதுலிங்கம் கிருஷ்ணவரதன்]

பிறப்பு
10-09-1972

வீரச்சாவு
22-07-19?1

தீராதி தீர, திலக் ஈழ மலர்வின்பம்
ஆராமை நீடாது அது காண்பீர் ஆணையிது!
வீராதி வீர வேங்கை திலக் நீர் மறைந்து
ஈராண்டு சென்றதுகாண் உள்ளீர் நின் தோழருடன்!

தந்தையார்: திரு சு. சேதுலிங்கம்,
தாயார்: திருமதி சே. வள்ளியம்மா,
சகோதரியர்: செல்வியர் சே. வரதா,
சே. ராதா, சே. அருணா.

ஆதிகோவிலடி,
வல்வெட்டித்துறை.

[5439]

## ஐ. தே. கவுடன் இணைவு; காமினி கட்சிக்குள் பிளவு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய
ன்னணியை ஐ. தே. க.
டன் இணைப்பது தொடர்
ாக அம்முன்னணியின் தலை
ரும், முன்னாள் அமைச்சரு
ான காமினி திஸநாயக்கா
மற்கொண்டிருக்கும் முயற்
க்கு கட்சிக்குள் பெரும்
நருக்கடி ஏற்பட்டிருப்பதா
க் கூறப்படுகின்றது. முன்
ணியின் தொழிற்சங்க வட்
ாரங்களும் மாகாண சபை
உறுப்பினர்களில் பெரும்பா
லானவர்களும் ஐ. தே. க.
வுடன் இணைவதற்கு கடும்
எதிர்ப்புத் தெரிவித்து வருகின்
றனராம்.

அண்மையில் முன்னணியின்
மாகாண சபை உறுப்பினர்
களாக தெரிவு செய்யப்பட்ட
53 பேருடனும் கலந்துரையா
டப்பட்டபோது 31பேர் இந்த
யோசனையை கடுமையாக
எதிர்த்துள்ளனராம்.

சீமேந்து பொதுத் தொழிலாளர் யூனியன்
சீமேந்து கூட்டுத்தாபனம்

### விசேட பொதுக் கூட்டம்

காலம்: 24.07.1993 சனிக்கிழமை காலை 9 30 மணி

இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

தலைவர்: திரு. நா. நடராசா

விடயம்: தொழிற்சாலையின் இன்றைய நிலை

சகல தொழிலாளர்களையும் தவறாது சமூமளிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

வ. சுப்பிரமணியம்
செயலாளர்

(5438)


### 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை சிவமூர்த்தி
(மகாலிங்கம் சதீஸ்வரன்)
(2-ம் வட்டாரம், புங்குடுதீவு.)

மைந்தனாய்: 19-08-1973
மாவீரனாய்: 22-07-1991





## வீரவேங்கை சிவமூர்த்தி

(மகாலிங்கம் சதீஸ்வரன்)
(2-ம் வட்டாரம், புங்குடுதீவு.)

மைந்தனாய்: 19-08-1973 | மாவீரனாய்: 22-07-1991

ஆனையிறவில் ஆகுதி ஆனாய்
மான மறவ! மறவோம் உன்னை!
அன்னை, தந்தை உடன் பிறந்தோரும்
உன்னை நினைந்தே உருகுகின்றோமடா!

ஆனையிறவில் இவரோடு வீரச்சாவு அடைந்த மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.

''நேசன்ஸ்''
தேணியடி,
திருநெல்வேலி.

பெற்றோர். சகோதரர்,
மைத்துனர்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(5422)

## 1-ம் வருட நினைவஞ்சலி



தோற்றம்
30-04-1975

வீரச்சாவு
22-07-1992

### கடற்புலி நக்கீரன்

[சங்கரலிங்கம் செந்தில்குமரன்]

தேசத்தின் விடிவிற்காக
தேகத்தை உருக்கியவன்...
தாயகத்தின் மலர்விற்காக
அலைகளில் நடந்தவன்...
வரலாறு வாழும் வரை வாழும்
வரம் பெற்ற மைந்தனிவன்... இவனை
பெற்றதற்காய் பெருமை கொண்டு -அவன்
காட்டிய திசையில் காலடி வைக்கிறோம்.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், அன்னார் அங்கத்துவம் வகித்த நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

லெப். கேணல் சந்தோசம் வீதி,
நாயன்மார்கட்டு.

(5411)





சுகாதாரம், சுத்தம், சுவை, தரம் அத்தனையும் பேணப்பட்டு காற்றூட்டப்பட்டு
உங்கள் மனங்குளிர வெளிவருகின்றது

**புத்தூக்கி மென்பானங்கள்!**

விற்பனவில் முன்னணி வகிப்பவை **புத்தூக்கி மென்பானங்கள்.**

இத்துடன், குழந்தைகள் மனம் மகிழ

இன்சுவை சொக்லட் **'சொக்கா" சொக்லட்**

**சொக்லட் வாங்கும்போது கேட்டுவாங்குங்கள்**

**சொக்கா - CHOCA - சொக்லட்!**

**குறிப்பு:-** 400 / 800 } மி.லீற். சோடா வெற்றுப் போத்தல் பெட்டியுடன் கொள்வனவு செய்யப்படும்.
ஜாம் போத்தல், கோடியல் போத்தல், சோஸ் போத்தல், வீவா போத்தல் ஆகியனவும் கொள்வனவு செய்யப்படும்.

**விபரங்களுக்கு நாடவும்**

பொது முகாமையாளர்

**யாழ். பகுதி தெங்கு ப.பொ.கூ.ச. கொத்தணி**

370, பருத்தித்துறை வீதி, **யாழ்ப்பாணம்.** (சி/7050)

சிந்தனைக்கு

எறும்புகள் சிறந்த குடிகள். ஏனெனில் தங்கள் இன நலனையே அவை தலையாயதாகக் கொள்கின்றன.

– கென்றி டேவிட் றோரோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-07-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05

## வேடனின் கையில் வீழ்ந்த புறாக்கள்

'நீ சிங்களவனா? தமிழனா? அதை முதலில் சொல்லு.' தென்னிலங்கையில் இன்று இளைஞர்கள், யுவதிகளை சிங்களப் பொலிசார் கேட்கும் முதலாவது கேள்வி இதுதான். பின்னர் தமிழர்கள் என்றால் கைது, சித்திரவதை, சிறைவாசம். பணம் கைமாறினால் விடுதலை. இவ்வாறாகவே, இன்றைய தென்னிலங்கையில் தமிழ் இளைஞர்கள், யுவதிகளின் வாழ்க்கை கழிகின்றது.

அண்மைக் காலத்தில், தென்னிலங்கையில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரின் எண்ணிக்கை பல ஆயிரமாகுமென அறியவருகிறது. இவர்கள் கொழும்பில் மட்டுமல்ல தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் வீடுகள், விடுதிகள், வீதிகள் ஆகிய இடங்களிலும் இருந்து கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையும், எங்கே வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது குறித்தும் தகவல் வெளியிட சிறிலங்கா பொலிசார் மறுத்து வருகின்றனர்.

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா பதவி ஏற்ற பின்னர், வழங்கிய பேட்டி ஒன்றில், ''இன்றைய வடக்கு. கிழக்குப் பிரச்சினை இன மோதலல்ல. இது 'பயங்கரவாத' மோதல். இது இன மோதலென்றால் பெரும்பான்மையான சிங்களவரும், சிறுபான்மையினரான தமிழ் மக்களும் சகோதர, சகோதரிகள் போல், செயற்படுவது எப்படி?... ஒரேகுடும்பத்தின் சகோதர, சகோதரிகள் போன்று சகலரும் நெருங்கிப் பழகி, ஒத்துழைப்புடன் நாட்டின் ஒருபகுதியில் செயற்படுகிறோம்'' எனத் தெரிவித்திருந்தார்.

அதாவது, இலங்கை மக்கள் ஒரு குடும்பம் போன்று உள்ளனர் என அதிகாரத்தின் உச்சியில் உள்ளவர் சொல்கின்றார். ஆனால், அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்துகின்றவர்களோ, 'நீ சிங்களவனா? தமிழனா?' எனக் கேள்வி எழுப்புகின்றனர். தமிழன் என்றால் கைது செய்கின்றனர். இதனை இனவாதம் என்று சொல்வதா? 'பயங்கரவாதம்' என்று சொல்வதா? ஒருவனைப் பார்த்து நீ தமிழனா? சிங்களவனா?

# தன்னிறைவுடன் தலை நிமிர முழு நிலமும் பயிரிடுவோம்

மூன்றாவது தசாப்தத்தை நோக்கி தமிழீழ விடுதலைப் போராட்டம் நகர்ந்து கொண்டிருக்கும் காலகட்டமிது. தமிழீழ மக்களாகிய நாம் எமது தாயகத்தை வென்றெடுப்பதற்கான இந்தப் போராட்டத்தின் போது நாம் அனைவருமே நடந்து வந்த பாதையினை இன்றைய இந்த நிலையில் திரும்பிப்பார்ப்பது அவசியமானதும் விவேகமானதுமாகும். உலகமே வியக்கும் வண்ணம் தமிழீழ விடுதலைப் போராட்டமானது வளர்ச்சி கண்டுவிட்டது. சிறிலங்கா அரசானது தனது தேசிய வருமானத்தில் அதிகமான பங்கினை இராணுவத்திற்கென ஒதுக்கி ஆயுத சந்தைகளில் கொள்வனவு செய்யப்படும் படைக்கலங்களை கண்ணை மூடிக்கொண்டு தமிழீழப் பகுதிகளிற் பாவித்தும், இராணுவ ரீதியில் எமது விடுதலைப் போராட்டத்தை வெற்றி கொள்ள முடியாத நிலையில் பொருளாதார ரீதியில் எம்மை எமது போராட்டத்தை அடிபணிய வைப்பதற்கு முனைந்துள்ளது, ஆரம்பத்தில் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வந்த இந்தப் பொருளாதார முற்றுகையானது இன்று வெளிப்படையாகவே தெரியப்படுத்தப்பட்டிருப்பதோடு, மனிதாபிமானமற்ற முறையில் உணவுப் பொருள்களில் கூட இறுக்கமான தடையைக் கொண்டு வருதலினூடாக, தனது பொருண்மிய முற்றுகையைமென்மேலும் தீவிரமாக்குகின்ற நிலையினை இன்னும் நாம் கண்கூடாகவே அறிய முடிகின்றது.

1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சிறிலங்கா அரசுடனான இரண்டாவது கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டபோது வட தமிழீழத்தின்மீது சிங்கள அரசினால் கொண்டு வரப்பட்ட பொருளாதாரத் தடையானது வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம் பகுதியில் இருந்து அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதாவது எமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் அனைத்துமே வட பகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருள்களாக பிரகடனப்படுத்தப்பட்டு தாண்டிக்குளம் பகுதியைக் கடந்து வடபகுதிக்கு எடுத்து வருவது தடை செய்யப்பட்டிருந்தது. ஆயினும் எமக்குத் தேவையான உணவுப்பொருள்களின் கணிசமான அளவுபொருள்கள் வடதமிழீழத்தின் வளமான பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டு தேவையான இடங்களுக்கு கொண்டுவரப்பட்டதனால், எங்களின் உணவுத்தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டு வந்தது. வளம் மிகுந்த எமது பகுதிகளில் இருந்து வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட உணவுத்தானியங்கள். எமது வட தமிழீழ மக்களது தேவையை ஓரளவு

இதன் மூலம் எமது சமுதாயம் ஒரு தன்னிறைவுத்தன்மையுடன் தலைநிமிர்ந்து நிற்பதன் அவசியத்தை புரிந்து கொண்டது. ஆம், எமது இனத்தின் தனித்துவமும், தன்மானமும் பாதுகாக்கப்பட்டது உழவுக்கு உதவும் எருதுகளும், நீர் இறைப்புக்கு துலாவும் ஏத்தும், பசளைக்காக இலையும் குழையும், விலங்கு கழிவுகளும் எங்களுக்கு ஆபத்து வேளைகளில் கைகொடுத்து வந்தன. எங்களைப் பொறுத்தவரை இவை ஒன்றும்புதிய தொழில் நுட்பங்கள் அல்ல. எமது தாய் தந்தையரால் பரம்பரை பரம்பரையாகவே கைக்கொள்ளப்பட்டுவந்த தொழில் நுட்பங்களே இவை இந்தத் தொழில் நுட்பங்கள்தான் எதிரி எம்மீது திணித்த பொருளாதார முற்றுகையின்போது நாம் தலை நிமிர்ந்தபடி தொடர்ந்தும் இப் போராட்டத்தை முன்னெடுக்க துணையாயிற்று.

எம்மீது திணித்த பொருண்மியத் தடையானது, சர்வதேச உலகத்தின் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டு அதன் மூலம் ஏற்படுத்தக் கூடிய அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டிய சிறிலங்கா அரசு, தனது பொருண்மிய முற்றுகையை இடையிடையே ஒரு குறுகிய காலத்துக்கு நெகிழ்த்துவதும் பின்னர் முன்னரை விட இறுக்கமாக நெருக்குவதுமாகச் செயல்பட்டு வருகிறது இந்த நிலையைப் புரிந்து கொள்ள நாம் பொருண்மிய முற்றுகையை இறுக்கியபோது எமது பாரம்பரிய விவசாய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த ஆரம்பிப்பதும், பொருண்மிய முற்றுகை தளர்த்தப்படும் போது பயன்படுத்த ஆரம்பித்த தொழில் நுட்பங்களை இடைநடுவில் கைவிட்டு எரிபொருளை எதிர்பார்த்துத் தவம் கிடப்பதுமாக உறுதியில்லாது திண்டாடுகின்றோம். இதனால் பல்வேறு விதங்களில் நாம் பாதிக்கப்படுவது பற்றி சற்றேனும் சிந்திப்பதில்லை.

பொருளாதாரத் தடை நெகிழ்த்தப்படும்போது சிறிலங்கா அரசு தமிழர் மீது இரக்கம் கொண்டு விட்டது என்ற ஒரு நப்பாசையில் கையிலுள்ள முதலையும், தேவைப்படும் போது கடன்பட்டுப் பெற்ற முதலையும் பயன்படுத்தி ஏராளமான பரப்பளவில் பெருந்தொகை முதலீட்டுடன் புகையிலை, வெண்காயம், மிள

க்கு வர விவசாய உள்ளீடுகள் தடைப்படுகிறது. பெரிய முதலீட்டுடன் செய்யப்பட்டு வரும் பயிர்கள் போதிய நீர் வசதியோ, உர வசதியோ இன்றி அழிவடைகிறது. இது ஒருவகையான தாக்கம். மறுபக்கம் இவ்வகை நெருக்கத்துக்கு முகம் கொடுத்தவாறு எதிர்நீச்சல் போட்டபடி எமது விவசாயியினால் செய்யப்படும் உற்பத்திகள் சந்தைக்கு வரும் வேளையில் தடையற்ற இறக்குமதியை அனுமதிப்பதன் மூலம், போட்டிச் சந்தையை உருவாக்கி அதனூடாக எமது விவசாயிகளது உற்பத்திப் பொருள்களுக்கான விலையினை வீழ்ச்சியடையச் செய்து விவசாயியினை நட்டமடையச் செய்வது இன்னுமொருவகைத் தாக்கமாகும். இவ்வாறான திட்டமிட்ட செயற்பாடுகளின் மூலம் விவசாயிகளாகிய நாம் மீண்டும் மீண்டும் கடனாளியாகின்றோம்.

எமது சொத்துக்கள் விமானக் குண்டுவீச்சாலும், செல்களாலும், பீரங்கித் தாக்குதல்களாலும் ஒருபுறம் அழிக்கப்பட, மறுபக்கத்தில் நாமே எமது திட்டமிடாத செயற்பாடுகளால் தேடிய சொத்துக்களை இந்தவகையில் இழந்தபடி எமது சிந்தனைகளுக்கும், செயற்பாடுகளுக்கும் கடிவாளமிட்டிருக்கின்றோம். இது தேவையா? எமது சந்ததி தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக ஒரு பக்கத்தில் இரத்தத்தை வார்த்து விடுதலை வேள்வியை நடாத்தி வரும் நாம் மறுபக்கத்தில் உணவுக்காக மற்றவரை எதிர்பார்த்து வாழ்வது நன்மை பயக்குமா? விடுதலைப் போராட்டத்தின்போது, குடிப்பதற்கான நீர்த்துளிக்குகூட நீண்ட வரிசைகளில் நின்று விலை கொடுத்துப் பெறுகின்ற நிலையில் சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்த இஸ்ரேலியர்தான் இன்று தமக்கென ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டு உலகத்தின் பார்வையைத் தம் பக்கமும் ஈர்ந்துள்ளார்கள். கதர்ஆடை உடுத்தும், சுதேசிய உணர்வினைத் தட்டி எழுப்பிய தன்மையும்தான் இந்தியாவால் வெள்ளையரை வெளியேற்ற முடிந்தது.

இவ்வகை உதாரணங்களை அறிந்து கொண்டு நாம், இன்று தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நசுக்க சிறிலங்கா

தலைப்போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றைய நிலைவரை 40.000 இற்கு மேற்பட்ட உயிர்களை இழந்தும், பல கோடிக்கணக்கான சொத்துக்களை இழந்தும் சற்றேனும் சளைக்காது கண்ணில் மணிபோல காத்து வளர்த்துவரும் எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் உணவு என்ற ஒன்றுக்காக பின்தள்ளப்படுவதை நாம் விரும்புகின்றோமா?

சோற்றுக்காகத் தமிழர்கள் தமது சுதந்திரத்தையே இழக்கக் கூடியவர்கள் என்று எதிர்கால உலக வரலாறுகள் எழுதப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க நாம் வழி சமைத்துக் கொடுப்போமா? இன்று, நாம் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய நெருக்கடியான காலகட்டத்திலுள்ளோம்.

யாழ்.மாவட்டத்தில் மொத்தம் 98350 கெக்டயர் (நீர் நிலை தவிர்ந்த) நிலப்பரப்பு இருப்பதாக புள்ளி விபரத்திரவுகள் கூறுகின்றன. இதில் ஏறக்குறைய 32255 கெக்டயர் நிலப்பரப்பு கல்நிலம், பற்றைகள், சிறுகாடு, உவர் சவர் தரைகளாக காணப்படுகின்றன எனவே மொத்த நிலப்பரப்பில் இந்த வகை நிலப்பரப்பு தவிர்ந்த நிலமாக 66095 கெக்டயர் நிலம் காணப்படுகின்றது. இந்த 66095 கெக்டயரிலும் 28989 கெக்டயர் நிலம் வீதிகளுக்காகவும், வீடுகளுக்காகவும், ஒதுக்கப்பட்டுள்ளன. வீதிகள் கட்டடங்கள் உள்ள இந்த 28989 கெக்டயர் நிலத்திலும் வீடு அமைந்துள்ளதும், கட்டடம் அமைந்துள்ளதும் பல்லாண்டுப் பயிர்கள் உள்ளதுமான நிலங்களாக சுமார் 19320 கெக்டயர் நிலமே காணப்படுகின்றது. அதாவது வீதிகள் வீடுகள் என்ற தேவைக்கு என ஒதுக்கப்பட்ட 28989 கெக்டயரில் 19329 கெக்டயர் நிலமே வீதி, வீடுகள் பல்லாண்டுப் பயிர்கள் என்பவற்றால் நிரப்பப்பட்டுள்ளது. மிகுதி 9660 கெக்டயர் நிலமும் குடியிருப்புக் காணிகளாக கணிக்கப்பட்டு எதுவித பயன்பாடுமற்று, தரிசாக காணப்படுகின்றது. இந்த நிலம் உற்பத்திக்கு உட்படுத்தப்படுமாயின் வருடாந்தம் சுமார் 19320 மெற்றிக் தொன் உணவினை உற்பத்தி செய்து பெறமுடியும் இருப்பினும் இந்த 9660 கெக்டயர்

யின் இன்றைய நிலையில் எம்மால் பயன்பாட்டுக்கு கொண்டுவரக்கூடிய குடியிருப்புக் காணிகளாக சுமார் 6762 கெக்டயர் நிலப்பரப்பினை உற்பத்தியில் ஈடுபடுத்த முடியும் (இது தற்போது யாழ். மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்டு வரும் தோட்டக் காணிகளின் அளவுக்கு அண்ணளவில் சமமான நிலப்பரப்பு) இந்த 6762 கெக்டயரும் உற்பத்திக்கு உட்படுத்தப் படுமாயின் வருடாந்தம் 13524 மெற்றிக் தொன் உணவினை உற்பத்தி செய்து பெறமுடியும் இது யாழ். குடாநாட்டு மக்களுக்கு சுமார் 40 நாட்களுக்கு தேவையான உணவினை ஈடுசெய்யக்கூடியதாக இருக்கும். ஆம் எமது வீட்டை அண்டிய பகுதிகளிலும், பொது இடங்களிலும் தரிசாகக் கிடக்கும் நிலத்தில் வருடாந்தம் எமது மக்களுக்கு 40 நாட்களுக்கு தேவையான உணவு மறைந்து கிடக்கிறது என்ற உண்மையை ஏன் நாம் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை?

எமது நாடு எல்லா வகையிலும் வளம் மிகுந்தது என்பதில் சந்தேகம் இல்லை. பண்டைக்கால எமது உணவு முறைகளுள் குரக்கனும், சாமையும், பயறும், உழுந்தும் ஒடியலும், ஏன் இராசவள்ளி, கறணை, மரவள்ளி என்றகிழங்குப் பதார்த்தங்களும் உணவாய்க் கொண்டு இன்னும் திடகாத்திரமாய் வாழும் எங்கள் தாய் தந்தையரின் அனுபவங்கள் எங்களுக்கு வழி காட்டட்டும். வீடுகளிலும் வெளிகளிலும்தரிசாய்க் கிடக்கும் நிலமெங்கும் எங்கள்குடும்பத்தின்பசியைத்தீர்த்திடபயிர்கள்செழிப்படைந்துவளரட்டும் எங்கள் உற்பத்தி வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்த பின் விற்பனைத் தேவைக்கும் சந்தைக்கு வரட்டும். முடிந்த வரை முழுநிலமும் பயிரிடுவோம். முடியாதபோது முயல்பவர்களுக்கு இடமளிப்போம். பயறும், உழுந்தும், சோயாவும் தரும் போசாக்குக்கு ஈடாக எந்த ஒரு தானியமும் தரப் போவதில்லை. எமது காலை உணவு பாணாக அமையாது பயறாக அமையட்டும். உழுந்துத் தோசையும், துவரம் பருப்பும் எங்கள் உணர்வுகளைக் கட்டிவளர்க்கட்டும்.

இந்தவகையில் நாம் தமிழீழ விடுதலைக்கு வழங்கும் பங்களிப்பு தாய்நாட்டின் விடு

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா பதவி ஏற்ற பின்னர், வழங்கிய பேட்டி ஒன்றில், ''இன்றைய வடக்கு. கிழக்குப் பிரச்சினை இன மோதலல்ல. இது 'பயங்கரவாத' மோதல். இது இன மோதலென்றால் பெரும்பான்மையான சிங்களவரும், சிறுபான்மையினரான தமிழ் மக்களும் சகோதர, சகோதரிகள் போல், செயற்படுவது எப்படி?... ஒரேகுடும்பத்தின் சகோதர, சகோதரிகள் போன்று சகலரும் நெருங்கிப் பழகி, ஒத்துழைப்புடன் நாட்டின் ஒருபகுதியில் செயற்படுகிறோம்'' எனத் தெரிவித்திருந்தார்.

அதாவது, இலங்கை மக்கள் ஒரு குடும்பம் போன்று உள்ளனர் என அதிகாரத்தின் உச்சியில் உள்ளவர் சொல்கின்றார். ஆனால், அரச அதிகாரத்தை நடைமுறைப்படுத்துகின்றவர்களோ, 'நீ சிங்களவனா? தமிழனா?' எனக் கேள்வி எழுப்புகின்றனர். தமிழன் என்றால் கைது செய்கின்றனர். இதனை இனவாதம் என்று சொல்வதா? 'பயங்கரவாதம்' என்று சொல்வதா? ஒருவனைப் பார்த்து நீ தமிழனா? சிங்களவனா? என்று கோருவது இன ஐக்கியத்தின் வெளிப்பாடா?

ஆனால், இது அதிகாரத்தின் உச்சியில் உள்ளவர்களின் அறிவுறுத்தல் இன்றி, சம்மதம் இன்றி இவை நடைபெறுகின்றதா என்றால், இல்லை என்றே கூறவேண்டும். ஏனெனில், தமிழ் இளைஞர்களின் கைது குறித்து சிறிலங்கா ஜனாதிபதி உட்பட அரசாங்கத் தரப்பினருக்கு பல தடவை தெரிவிக்கப்பட்டுள்ளன. இது குறித்து அரசாங்கத்தால், சில அறிவுறுத்தல்களும், விதிமுறைகளும் வெளியிடப்பட்டும் உள்ளன. ஆனால், அரசாங்கம் இவற்றை நடைமுறையில் கொள்ளவில்லை. சிங்கள பொலிசாரோ, ஆயுதப்படையினரோ கருத்திற் கொள்வதாகஇல்லை. தமிழர் என்பதற்காகமட்டுமே ஆயிரக்கணக்கில் இளைஞர்களையும், யுவதிகளையும் கைது செய்து காவலில் வைத்துள்ளனர். இதனை இனவாதம் என்று கூறாமல் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா கூறுவதுபோன்று, சகோதரத்துவம் எனக் கூறின் சரியாகுமா?

அத்தோடு, தமிழர்களைக் கைது செய்வதென்பது சிங்களப் பொலிசாருக்கு பொன் முட்டையிடும் வாத்தைப் பிடிப்பது போன்றது. தமிழர் என்ற காரணத்திற்காக மட்டும் கைது செய்யப்படுவர்கள் இன்று சிறையை விட்டு வெளியே வருவதற்கு பல ஆயிரம் ரூபாக்களை பொலிசாருக்கோ, அன்றி ஆயுதப்படையினருக்கோ லஞ்சமாகக் கொடுக்க வேண்டியுள்ளது. அதன்பின்னரே விடுதலை பற்றிச் சிந்திக்க முடிகின்றது.

ஆனால், ஆயிரக்கணக்கில் கைது செய்யப்படுவதற்கும், சிறையில் வாடுவதற்கும் தனியாக சிங்களப் பொலிசாரின் நடவடிக்கையே காரணம் எனக் கூறமுடியாது. கைதாவதற்கும், பணம் கொடுத்து வெளிவருவதற்கும் சந்தர்ப்பத்தை வழங்கும் தமிழ் இளைஞர்களினதும், யுவதிகளினதும் பங்கும் இதில் கணிசமாகவுள்ளது. தாயக மண்ணில் இருந்து வெளியேறி வேற்று மண்ணில் அதுவும், பேரினவாத சிந்தனை பேயாட்டம் போடும் பகுதியில் நிம்மதியாக வாழமுடியும் எனச் சென்றமை அவர்களுடைய தவறாகும். இது வேடனின் வலையில் தானாகச் சென்று சிக்கும் புறாவின் நிலைக்கு ஒப்பானதாகும். இந்நிலையில், பேரினவாதத்திற்கு தாம் கைதாவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கியவர்கள் இதனை அனுபவிப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

---

...பட்டிருந்தது. அதாவது எமக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் அனைத்துமே வடபகுதிக்கு தடை செய்யப்பட்ட பொருள்களாக பிரகடனப்படுத்தப்பட்டு தாண்டிக்குளம் பகுதியைக் கடந்து வடபகுதிக்கு எடுத்து வருவது தடை செய்யப்பட்டிருந்தது. ஆயினும் எமக்குத் தேவையான உணவுப்பொருள் களின் கணிசமான அளவுபொருள்கள் வடதமிழீழத்தின் வளமான பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டு தேவையான இடங்களுக்கு கொண்டுவரப்பட்டதனால், எங்களின் உணவுத்தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டு வந்தது. வளம் மிகுந்த எமது பகுதிகளில் இருந்து வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட உணவுத்தானியங்கள். எமது வட தமிழீழ மக்களது தேவையை ஓரளவு ஈடு செய்து கொண்டிருந்தது. நாம் எமது வளத்தினைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசினது பொருளாதார முற்றுகையை முறியடித்துவந்தோம்.

...நுட்பங்களை... ஆரம்பிப்பதும், பொருண்மிய முற்றுகை தளர்த்தப்படும் போது பயன்படுத்த ஆரம்பித்த தொழில் நுட்பங்களை இடைநடுவில் கைவிட்டு எரிபொருளை எதிர்பார்த்துத் தவம் கிடப்பதுமாக உறுதியில்லாது திண்டாடுகின்றோம். இதனால் பல்வேறு விதங்களில் நாம் பாதிக்கப்படுவது பற்றி சற்றேனும் சிந்திப்பதில்லை.

பொருளாதாரத் தடை நெகிழ்த்தப்படும்போது சிறிலங்கா அரசு தமிழர் மீது இரக்கம் கொண்டு விட்டது என்ற ஒரு நப்பாசையில் கையிலுள்ள முதலையும், தேவைப்படும் போது கடன்பட்டுப் பெற்ற முதலையும் பயன்படுத்தி ஏராளமான பரப்பளவில் பெருந்தொகை முதலீட்டுடன் புகையிலை, வெண்காயம், மிளகாய் என்றவாறு பயிர்களை செய்ய முயல்கின்றோம். தோட்டத்தில் பயிர் செழித்து வளர்கையில் மீண்டும் பொருளாதாரத் தடை நடைமுறை...

...பார்த்து வாழ்வது நன்மை பயக்குமா? விடுதலைப் போராட்டத்தின்போது, குடிப்பதற்கான நீர்த்துளிக்குகூட நீண்ட வரிசைகளில் நின்று விலை கொடுத்துப் பெறுகின்ற நிலையில் சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்த இஸ்ரேலியர்தான் இன்று தமக்கென ஒரு நாட்டில் வாழ்ந்து கொண்டு உலகத்தின் பார்வையைத் தம் பக்கமும் ஈர்ந்துள்ளார்கள். கதர்ஆடை உடுததும், சுதேசிய உணர்வினைத் தட்டி எழுப்பிய தன்மையும்தான். இந்தியாவால் வெள்ளையரை வெளியேற்ற முடிந்தது.

இவ்வகை உதாரணங்களை அறிந்து கொண்டு நாம், இன்று தமிழீழ விடுதலைப்போராட்டத்தை நசுக்க சிறிலங்கா அரசு பயன்படுத்தும் பொருளாதாரத் தடையை உடைத்து போராட்டத்தை முனைப்புடன் முன்னெடுக்க தாமதிப்பது நியாயமா? எமது விடு...

...அமைந்துள்ளதும், அமைந்துள்ளதும் பல்லாண்டுப் பயிர்கள் உள்ளதுமான நிலங்களாக சுமார் 19320 கெக்டயர் நிலமே காணப்படுகின்றது. அதாவது வீதிகள் வீடுகள் என்ற தேவைக்கு என ஒதுக்கப்பட்ட 28989 கெக்டயரில் 19329 கெக்டயர் நிலமே வீதி, வீடுகள் பல்லாண்டுப் பயிர்கள் என்பவற்றால் நிரப்பப்பட்டுள்ளது. மிகுதி 9660 கெக்டயர் நிலமும் குடியிருப்புக் காணிகளாக கணிக்கப்பட்டு எதுவித பயன்பாடுமற்று, தரிசாக காணப்படுகின்றது. இந்த நிலம் உற்பத்திக்கு உட்படுத்தப்படுமாயின் வருடாந்தம் சுமார் 19320 மெற்றிக்தொன் உணவினை உற்பத்தி செய்து பெறமுடியும் இருப்பினும் இந்த 9660 கெக்டயர் குடியிருப்பு காணியினதும் 30 வீதமான காணிகள் இராணுவப் பகுதிக்குள் உள்ளது என்று கணிப்பிட்டு அதனை தவிர்த்துக் கொள்வோமா...

...பத்தின்பசியைத்தீர்த்திடபயிர்கள்செழிப்படைந்துவளரட்டும் எங்கள் உற்பத்தி வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்த பின் விற்பனைத் தேவைக்கும் சந்தைக்கு வரட்டும். முடிந்த வரை முழுநிலமும் பயிரிடுவோம். முடியாதபோது முயல்பவர்களுக்கு இடமளிப்போம். பயறும், உழுந்தும், சோயாவும் தரும் போசாக்குக்கு ஈடாக எந்த ஒரு தானியமும் தரப் போவதில்லை. எமது காலை உணவு பாணாக அமையாது பயறாக அமையட்டும். உழுந்துத் தோசையும், துவரம் பருப்பும் எங்கள் உணர்வுகளைக் கட்டிவளர்க்கட்டும்.

இந்தவகையில் நாம் தமிழீழ விடுதலைக்கு வழங்கும் பங்களிப்பு தாய்நாட்டின் விடுதலையை விரைந்து பெற்றுத் தரட்டும்.

(தமிழீழ பொருண்மிய)
மேம்பாட்டுக் கழகம்

---

## வாழப்பாடி குழுவினர் புதுடில்லி பயணமாகினர்

(சென்னை)

காவிரி நீர்ப்பிரச்சினை தொடர்பாக பிரதமர் நரசிம்மராவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வாழப்பாடி இராமமூர்த்தி தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளது.

இந்தப் பயணத்திற்கு முன்பாக சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வாழப்பாடி இராமமூர்த்தி பிரதமரைச் சந்தித்து காவிரியில் தண்ணீர் திறந்துவிடப்படவேண்டிய அவசியத்தையும், குறுவை விவசாயத்தைப் பாதுகாக்க இது அவசியமானது என்று வலியுறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு பேச்சு நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

அத்துடன் முதல்வரின் உண்ணாவிரதப் போராட்டம் பற்றியும், தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்தும் பேச்சுக்களின்போது தெரிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## உண்ணாவிரதத்தை விட்டு பேச்சு நடத்துக

### தமிழக காங்கிரஸ் கோரிக்கை

(சென்னை)

காவிரிநதி நீர் பிரச்சினைக்கு தீர்வு காண உண்ணாவிரதத்தை கைவிட்டு பேச்சுவார்த்தை நடத்த முன்வரும்படி காங்கிரஸ்கட்சி முதல்வர் ஜெயலலிதாவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி. என். காட்கில் இது தொடர்பாக நேற்று புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது: மோதல் போக்கை கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் அனைத்து பிரச்சினைக்கும் தீர்வு காணப்படமுடியும் என்றும் தெரிவித்தார்.

## அனைத்துக் கட்சி மாநாடு நடத்தக் கோரிக்கை

(டில்லி)

காவிரி நதிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு அனைத்துக் கட்சி மாநாட்டை பிரதமர் நரசிம்மராவ் கூட்டவேண்டும் என்று ஜனதாக் கட்சியின் (அஜித் சிங் பிரிவு) பொதுச் செயலாளர் ஜிதேந்திர பிரசாத் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தமிழக முதல்வர் ஜெயலலிதா தமது உண்ணாவிரதத்தை உடன் கைவிடவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## தொண்டர்கள் மீது பயணிகள் தாக்கு

(சென்னை)

சென்னை கடற்கரை ரயில் நிலையத்தில் ரயிலை மறிக்க முனைந்த அ.இ.அ.தி.மு.க. தொண்டர்கள் பயணிகளால் தாக்கப்பட்டு காயமடைந்தனர். இதில் பாடநூல் கழகத் தலைவர் திருமதி ஈ. வி. கே. சுலோசனா சம்பத், மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ஜெயபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி மல்லிகா, திருமதி நிர்மலா, திருமதி கலைச்செல்வி ஆகியோரே காயமடைந்தோராவர்.

## வெள்ளியன்று விசாரணை

(சென்னை)

ஜெயலலிதாவை சட்டப் பேரவை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கக் கோரும் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியின் மனு மீதான தமிழக ஆளுநரின் நிலையையும் தலைமைத் தேர்தல் ஆணையாளரின் நிலையையும் கேட்டு அறியுமாறு சென்னை உயர் நீதிமன்றம் அரச தரப்பு வழக்கறிஞரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

வழக்கறிஞர் இது பற்றிய தகவல்களைத் தெரிவித்த பின்பு டாக்டர் சுவாமியின் மனு இம்மாதம் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

## கர்நாடகத்தின் கூற்றுக்கு தமிழகம் மறுப்பு

(சென்னை)

காவிரியில் இதுவரை 17.77 டி. எம். சி. தண்ணீர் திறந்துவிட்டிருப்பதாக கர்நாடக அரசு கூறியிருப்பதை தமிழக அரசு மறுத்துள்ளது. ஜூன் ஜூலை ஆகிய இரு மாதங்களிலும் 52.93 டி. எம். சி தண்ணீர் தமிழ்நாட்டிற்கு தரப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஜூன் மாதத்தில் 4.82டி. எம். சி. தண்ணீரும், ஜூலை மாதத்தில் இதுவரை 11.04 டி. எம். சி. தண்ணீரும் மட்டுமே விடப்பட்டிருக்கின்றது என்றும் தமிழக அரசு சுட்டிக்காட்டி இருக்கிறது. வழக்கமாக தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய தண்ணீரில் 37 டி. எம். சி. குறைவாக கிடைத்திருக்கிறது என்றும் தமிழக அரசு கூறியுள்ளது.

மேலும் தமிழகம் காவிரி டெல்டா பகுதியில் பாசன வசதி பெறும் நிலத்தில் செய்கையை அதிகரித்திருப்பதாக கூறப்படுவதையும் தமிழக அரசு வன்மையாக மறுத்துள்ளது. 71/72-ம் ஆண்டுகளில் 28 லட்சம் ஏக்கராக இருந்த பாசனப் பகுதி தற்போது 18.31 லட்சம் ஏக்கராக குறைந்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

## ஜெயலலிதாவின் நிலைக்கு புதுவை காங்கிரஸ் ஆதரவு

(சென்னை)

காவிரிநதி நீர் பிரச்சினை தொடர்பாக உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் முதல்வர் ஜெயலலிதாவின் நிலைப்பாட்டை புதுவை மாநில காங்கிரஸ் கட்சி வரவேற்றுள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் சண்முகம்பாண்டிச்சேரியில்விடுத்த அறிக்கையில் மேலும் இந்தப் பிரச்சினையில் பிரதமர் உடனடியாக தலையிட்டு காவிரியில் தண்ணீர் திறந்துவிட ஆவன செய்ய வேண்டும் என்றும்கோரிக்கைவிடுத்துள்ளார்.

## தொண்டர்கள் தீக்குளிப்பில் ஈடுபட வேண்டாம்

### ஜெயலலிதா வேண்டுகோள்

தீக்குளிப்பு போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று கட்சித்தொண்டர்களுக்கு தொடர்ந்து நான்காவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வரும் முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் பல்வேறு பகுதிகளிலும் இத்தகைய தீக்குளிப்பு சம்பவங்கள் இடம்பெற்றிருப்பது குறித்து தாம் மன வேதனையுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாதம்

# கனடா இனவெறி தாக்குதல்; எதிராக தமிழர் ஊர்வலம்

(கொழும்பு)

கனடாவில் இனவெறித் தாக்குதல்களை உடன் நிறுத்துமாறு கோரி கடந்த மாத இறுதியில் கனடாவில் உள்ள இலங்கைத் தமிழ் அமைப்புகள் இணைந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தின ஊர்வல முடிவில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

முத்துலிங்கம் குணாளன் என்ற இலங்கைத் தமிழர் இரு கனேடியர்களால் குத்திக் கொல்லப்பட்டமையையும் கணேஸ்வரமூர்த்தி விக்னேஸ்வரமூர்த்தி என்பவர் படுகாயமடைந்தமையையும் ஆட்சேபித்து இந்த ஊர்வலம் நடைபெற்றது.

இதேசமயம் கடந்த 18ஆம் திகதி மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவராஜா வினாசித்தம்பி என்பவர் கனேடிய இனவெறி இளைஞர் ஒருவரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளார். உணவு விடுதியில் பணிபுரியும் அவரை தாக்கிய ஜேசன் ஹீலன்ஸ் என்ற இந்த கனேடிய இளைஞரை பிணையில் விட நீதிபதி மறுத்துவிட்டார்.

சிவராஜா வினாசித்தம்பி மீது நடத்தப்பட்ட தாக்குதலை அவரோடு பணிபுரியும் கனேடியர்கள் கண்டித்துள்ளனர். இதனிடையே வினாசித்தம்பியை தாக்கியவர் தாம் 'தோல்தலையர்' அமைப்பை சேர்ந்தவர் என நீதிபதி முன் தெரிவித்துள்ளாராம். தோல்தலையர் என்றால் என்ன என்று நீதிபதி கேட்டபோது அது சமூகத்தை உருவாக்கும் அமைப்பு என தாக்குதல் நடத்தியவர் கூறினார். தனது நடவடிக்கைகள் மற்றும் தனது நாடு. இனம் என்பவை குறித்தும் தான் பெருமையடைவதாக அந்த கனேடிய இளைஞர் கூறினார்.

## உப்புக் கூட்டுத்தாபன ஊழியரின் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த வடபிராந்திய ஊழியர்களின் 1992-ம் ஆண்டுக்கான முழுச் சம்பளத் தொகையும் மக்கள் வங்கிமூலம் ஊழியர்களின் வங்கிக் கணக்கிறகு அனுப்பப்பட்டிருப்பதாகக் கூட்டுத்தாபன அதிகாரியின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஊழியர்கள் தத்தம் வங்கிக் கிளைகளுடன் தொடர்பு கொண்டு பணத்தைப் பெற்றுக் கொள்ளும்படியும், சம்பளக் கணக்கில முரண்பாடு காணப்படுமாயின் அல்லது பணம் கிடைக்காவிடின் ஜூலை 27ஆம் திகதிக்குமுன்னர் உப்புக் கூட்டுத்தாபனப் பிராந்தியச் செயலகத்தில் வேலை நாட்களில் தொடர்பு கொள்ளும்படியும் முகாமையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தளபாட விநியோகம் பட்டியல் அனுப்பப் பணிப்பு

1989-1992 காலப்பகுதியில் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட தளபாடங்களின் விபரங்களை உடன் அமைச்சின் திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்குமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிகல்விப் பணிப்பாளர்களை வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம். ஏ. சி. முகைதீன் பணித்துள்ளார்.

இவ்விபரத்தில் மாணவருக்காக விநியோகிக்கப்பட்ட மேசை, கதிரை பாலர்களுக்கான மேசை, கதிரை ஆசிரியர்களின் மேசை, கதிரை மற்றும் கரும்பலகை விபரங்களும் இவற்றுக்கான மொத்தப் பெறுமதிகளும் பாடசாலை ரீதியாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். [17]

## கரும்புகை

[வடமராட்சி]

பலாலி சிறிலங்கா இராணுவ முகாம் பகுதியில் நேற்று நண்பகல் கரும்புகை மண்டலம் காணப்பட்டது.

முகாமைச் சூழவுள்ள கட்டடங்கள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டு வருவதினால் இப்புகை மண்டலம் ஏற்பட்டிருக்கலாமென சொல்லப்படுகிறது. [யோ]

## சான்றிதழ் வழங்கல்

பத்திரிகையாளர், சமூக சேவை, சமூகநலன், உதவித் தாதி, தட்டெழுத்தாளர் ஆகிய பயிற்சிகளில் சித்தியடைந்தோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அலுவலகத்தில் எதிர் வரும் 24ஆம் திகதி நடைபெற விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

## இன்று 'வெளிச்சம்' வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' (கலை, இலக்கிய சமூக இதழ்) ஆடிமாத இதழ் இன்று வெளிவருகின்றது

இந்த இதழில் 'கரும்புலிகள்' நாளையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய 'கரும்புலிகள் எங்கள் போராட்ட மரபில் புதியதோர் வடிவம்' என்ற செய்தியும் போராளியின் பேனாவிலிருந்து' பகுதியில் இளந்திரையன், அடம்பனூர் செ.திருமாறன் ஆகியோரின் கவிதைகளும், சுதாமதியின்சிறுகதையும் இடம்பெற்றுள்ளன. அத்துடன் என் சண்முகலிங்கன், வீ. பரந்தாமன், கவிஞர் புதுவை இரத்தினதுரை, ஜெ. கி. ஜெயசீலன் ஆகியோரின் கவிதைகளும், குப்பிளான் ஐ. சண்முகன், மலரன்னை, சு. மகேந்திரன் ஆகியோரின் சிறுகதைகளும் சபா. ஜெயராசாவின் கட்டுரையும் உள்ளன.

'கரும்புலிகள்' ஒலிநாடா மதிப்பீட்டுரையை கா சி. யும், 'தாயகக் கனவு' (குறும்படம்) மதிப்பீட்டுரையை கருணாகரனும், 'உண்மைகள்' (உருவகக் கதைகள்) மதிப்பீட்டுரையை இளையவனும் எழுதியுள்ளனர்.

இந்த இதழ் வெளிச்சத்தின் பதினாறாவது இதழாகும்.

## தொழிலாளி படுகாயம்

[வடமராட்சி]

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த 'குமாரி' கப்பலில், தொழிலாளி ஒருவரின் மேல் மூடை விழுந்து படுகாயமடைந்தார்.

சுப்பர் மடத்தைச் சேர்ந்த அழகராசா என்ற தொழிலாளியே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். [போ]

## விமானப்படைத் தளபதி சேவை நீடிப்பு கோருகிறார்

விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன ஆறு மாதச் சேவை நீடிப்புக் கேட்டிருப்பதாக பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசு விண்ணப்பத்தை ஏற்றுச் சேவை நீடிப்பு வழங்கினால் ரெறன்ஸ் குணவர்த்தனா 1994 பெப்ரவரி மாதம் வரை சேவையில் இருப்பார். அவரது பதவிக்காலம் இவ்வருடம் ஆகஸ்ட் 15-ம் திகதியுடன் முடிவடைகிறது.

அடுத்த மாதம் அல்லது 1994 பெப்ரவரியில் விமானப் படைத் தளபதி இளைப்பாறியதும் அவரின் இடத்துக்கு சீவ் - ஓவ் - ஸ்ராவ் ஒலிவர் எம். ரணசிங்கா நியமிக்கப்படவுள்ளார்.

## 5-ம் உற்சவ விஞ்ஞாபனம்

அருள்மிகு அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன ஆலய வருடாந்த ஐந்தாம் நாள் உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பூரகாமம் (ஆடிப் பூரம்) விசேட உற்சவத்துடன் வெகு சிறப்பாக நடைபெறும்.

குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு விசேட மேளக்கச் சேரிகளும், பிற்பகல் 3-30 மணிக்கு அகில இலங்கை கம்பன கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் "தாயினும் நல்ல தலைவி" எனனும் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

விளம்பர அன்பளிப்பு:-
கணேஷா வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி, 7056) அம்பாள் 5 ஆம் உபயம்

## வெற்றுச்சாராயப்போத்தல், பெட்டி தேவை

எமது சந்தைப் படுத்தல் பகுதிக்கு வெற்றுச் சாராயப போத்தல்கள், பெட்டிகள் தேவையாகவுள்ளன. விலை பேசித் தீர்க்கலாம். வைத்திருப்

வடகிழக்கு மாகாணசபையிலிருந்து

## யாழ். மாநகர சபைக்கு அதிக உதவு நிதி கிடைக்கும்?

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்கு வடகிழக்கு மாகாண சபையினால் வழங்கப்படும் உதவு தொகைக் கொடுப்பனவை அதிகரித்து வழங்க வடகிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி கொடுப்பனவு அரசினால் தமது நிர்வாகச் செலவுகளை சமாளிக்க முடியாத உள்ளூராட்சி மன்றங்களிற்கு வழங்கப்படுகின்றன. இக் கொடுப்பனவு யாழ். மாநகர சபைக்கு போதாமையை தொடர்ந்து யாழ். மாநகர சபை வடகிழக்கு மாகாண சபையிடம் முறையிட்டதை அடுத்து மேற்படி உதவு தொகையை அதிகரித்து வழங்க வடகிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனை அடுத்து யாழ். மாநகர சபை ஊழியர்கள் இதனால் நன்மை அடைவார்கள் என யாழ். மாநகரசபை வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. (பா) (நி)

## வீதி அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு சுமார் 250 தார்ப்பீப்பாக்களை யாழ் மாநகர சபை இங்கு எடுத்துவர கூட்டுப் படைகள் தலைமையகம் அனுமதி வழங்கியிருந்தபோதிலும் தம்மிடம் போதிய நிதிவசதி இல்லாமையினால் அவற்றினை இங்கு எடுத்துவர முடியாத நிலை உருவாகி இருப்பதாக யாழ். மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைத்தொடர்ந்து யாழ் நகரின் வீதி அபிவிருத்தி வேலைகள் ஸ்தம்பிதமடையும் நிலையில் உள்ளதாகவும் இம்முறை வீதி அபிவிருத்திக்கு எவ்வித நிதியும் ஒதுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் வீதி அபிவிருத்தியை புனர்வாழ்வுப் பகுதியுடன் இணைக்கும் பட்சத்திலேயே வீதி அபிவிருத்திக்கு தேவையான நிதியை ஒதுக்க முடியும் என யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான நடவடிக்கையாக வீதி அபிவிருத்தியை புனர்வாழ்வுப் பகுதிக்குள் சேர்க்குமாறு சம்பந்தப்பட்ட வட்டாரங்களுக்கு யாழ். மாநகரசபை கோரிக்கை விட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

மழையை துழைப்பும் வழங்காது என்றார்.

காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து விசாரிக்க கர்நாடக சட்டசபையை உடன் கூட்டும்படி எதிர்க்கட்சிகள் முதலமைச்சர் வீரப்ப மொளலியைக் கேட்டுள்ளன.

தெரிவுக்குழு

பகிஷ்கரித்து வருவதனால் தெரிவுக்குழு தொடர்ந்தும் கூடுவதில் அர்த்தமில்லை என

## பயிற்சி நெறி ஆரம்பம்

மாவட்ட, கோட்டக் கல்வி அலுவலகங்களின் நிதி உதவியாளர். அலுவலக உதவியாளர்கள் கணக்கு லிகிதர்கள் ஆகியோருக்கான பயிற்சிநெறி ஆகஸ்ட் மாத இறுதியில் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

உத்தியோகத்தரின் திரல்களை மேலும் காலதாமதத்திற்கு உட்படுத்தாது, இம் மாத முடிவுக்கு முன் அனுப்புமாறு அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களையும் வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்.

## ருகுணுவில் மண்ணெய்

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 'ருகுணு' கப்பல் நேற்று காலை வந்தடைந்தது. இக் கப்பலில் 2121 மண்ணெண்ணெய் பரல்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. பரல்கள் உடனடியாக இறக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை குமாரி கப்பல் நேற்று புறப்பட்டது. இக்கப்பலில யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் உட்பட மூன்று உத்தியோகத்தர்கள் சென்றனர். யாழ் பிரதம தபால் அலுவலகம் 36 தபால் பொதிகளை அனுப்பி வைத்தது. (யோ)

## விபத்தில் மூவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் நேற்று மாலை நடந்த மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் சிறுமி ஒருவரின் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. மோட்டார் சைக்கிளில் வந்த ஐயாத்துரை சிறிசங்கர் ஆகிய இருவரும் சைக்கிளில் வந்த சிறுமி ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். இவர்கள் சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (சி)

கொழும்பு

கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு லிப்டன் சந்தியில் ஒன்று கூடிய பெருமளவு ஊழியர்களே இவ்வாறு கோஷங்களை எழுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கொழும்பின் பிரதான சந்திகளில் ஊழியர்கள் மறியல் போராட்டங்களையும் நடாத்

விபரம் அன்பளிப்பு:-
கணேஷா வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி, 7056) அம்பாள் 5 ஆம் உபயம்

# தேசிய கல்வி நிதியம்

தேசிய கல்வி நிதியம் ஒன்றை தெ. ப. பொ. கூ. சங்கங்கள் நடைமுறைப்படுத்தி ஒழுங்கான திட்டமிட்ட கல்விப்பணிக்கு பயன்படுத்த முடிவெடுத்துள்ளன. இதனால் கல்வி தொடர்பாக தனி நிறுவனங்களுக்கு வழங்கும் நிதி நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. பொருத்தமான சகல நிதிக் கோரிக்கைகளையும் கீழ்வரும் நிறுவனங்கள் மூலம் தொடர்பு கொண்டு அறியத்தரின் கோரிக்கையை கல்வி அமுலாக்கல் குழு மூலம் சிபார்சு செய்யும் பட்சத்தில் மாத்திரம் நிதி வழங்க முடிவு செய்யப்படும்.

1. பொதுமுகாமையாளர், யாழ். தெ. ப. பொ. கூ. ச. கொத்தணி, யாழ்ப்பாணம்.
2. பொதுமுகாமையாளர், வலிகாமம் தெ. ப. பொ. கூ. ச. கொத்தணி, சங்கானை.
3. பொதுமுகாமையாளர், தென்மராட்சி தெ. ப. பொ. கூ. ச. கொத்தணி, வரணி.
4. பொதுமுகாமையாளர், வடமராட்சி தெ. ப. பொ. கூ. ச. கொத்தணி. திக்கம்

பொதுமுகாமையாளர்.
வடமாகாண தெ ப பொ. கூ. ச. சமாசம்
(சி/7058) யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமலர் சிவஞானசுந்தரம்

(ஆசிரியை சென். தோமஸ் றோ. க. பெ. பா.)

துப்பளையைச் சேர்ந்த ஆசிரியை (சென் தோமஸ் R. C G. S) இராசமலர் சிவஞானசுந்தரம் 21-07-1993 இல் காலமானார். இவர் சிவஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், சிவஜினியின் அன்புத்தாயாரும், பாக்கிய லெட்சுமி, காலஞ்சென்ற முத்துலிங்கம், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், சண்முகராசாவின் மைத்துனியும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். இறுதிக்கிரிகைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
(5445) அதிபர் சென் தோமஸ் றோ. க. பெ. பா.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜுலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வெற்றுச்சாராயப்போத்தல், பெட்டி தேவை

எமது சந்தைப் படுத்தல் பகுதிக்கு வெற்றுச் சாராயப் போத்தல்கள், பெட்டிகள் தேவையாகவுள்ளன. விலை பேசித் தீர்க்கலாம். வைத்திருப்போர் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்,

பொதுமுகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
[சி/7059] 499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

# 31-ம்நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 07 - 04 - 1913



மறைவு: 23 - 06 - 1993

## கூடலூர் நாகநாதி சோமசுந்தரம்

எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தி இறையடி சேர்ந்த கூடலூர் நாகநாதி சோமசுந்தரம் அவர்களின் அந்தியேட்டி வில்லூன்றியில் (22-7-93) இன்று காலை 7-00 மணிக்கும் சபிண்டீகரணம் (23-7-93) நாளை வெள்ளி நண்பகல் 12-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளன. நண்பர்களையும், உறவினர்களையும் இவ்வைபவங்களில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அமரர் சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

15/10 இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5448)

படி எதிர்க்கட்சிகள் முதலமைச்சர் வீரப்ப மொய்லியைக் கேட்டுள்ளன.

தெரிவுக்குழு

பகிஷ்கரித்து வருவதனால் தெரிவுக்குழு தொடர்ந்தும் கூடுவதில் அர்த்தமில்லை எனவும் இதனால் தெரிவுக்குழு கலைக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது

யாழ்.

விவசாயிகளுக்கென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே அளவில் இம்முறை விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்ய முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. (தி)

புதிய

கள் திறக்கப்பட வேண்டும். கூட்டுறவுத் திணைக்களம், கமநலசேவைத் திணைக்களம் ஆகிய அரச கட்டடங்களில் இவ் அலுவலகங்களைத் ஸ்தாபிக்க முடியும்.

அலுவலகங்களுக்கு காரியாலய உதவியாளர், நிதி உதவியாளர், எழுதுநர்கள், தட்டெழுத்தாளர். அலுவலகத் தொழிலாளர் அலுவலக காவலாளிகள் ஆகியோர் இடம் பெற வேண்டும். இவர்களை ஒவ்வொரு அலுவலகங்களுக்கும் நியமிப்பது அல்லது இடமாற்றுவது தொடர்பான விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறும் இவர் பணித்துள்ளார்.

அத்துடன் அலுவலகத்துக்குத் தேவையான தளபாடங்கள், உபகரணங்கள் போன்றவற்றை கோட்டக் கல்வி அலுவலகம், மாவட்டக் கல்விப் பணிப்பாளர் அலுவலகம், கொத்தணி அதிபர் அலுவலகம் ஆகியவற்றிலிருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் இவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஒவ்வொரு பிரதேசக் கல்விக் கோட்டத்தில் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்களின் தொகையையும் அக்கோட்டத்திலுள்ள தற்போதைய ஆசிரியர்களின் தொகையையும் தெரிவிக்குமாறும் இவர் மேலும் கேட்டுள்ளார். (17)

இதற்கான நடவடிக்கையாக வீதி அபிவிருத்தியை புனர்வாழ்வுப் பகுதிக்குச் சேர்க்குமாறு சம்பந்தப்பட்ட வட்டாரங்களுக்கு யாழ். மாநகரசபை கோரிக்கை விட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

(பா), (நி)

உண்ணாவிரத

பயன்பட்டது என்றும் பி.பி.ஸி செய்தியாளர் குறிப்பிட்டார்.

முன்னதாக ஜெயலலிதா நடுவர் மன்றத் தீர்ப்பை முழுமையாக கர்நாடகம் அமுலாக்கி காவிரி கழிமுகப் பகுதி பயிர்களை காப்பாற்றினாலேயன்றி தாம் உண்ணாவிரதத்தைக் கைவிடப்போவதில்லை என்று கூறியிருந்த போதிலும் கர்நாடகம் பிடிவாதமாக இருந்ததால் ஜெயலலிதா தனது உத்தியை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. ஜெயலலிதாவின் கோரிக்கைக்கு கர்நாடகம் இணங்கியிருந்தால் 1991 இல் கர்நாடகத்தவர்களால் தமிழக மக்கள் தாக்கி விரட்டப்பட்ட சம்பவம் போன்று மீண்டும் ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கும்.

நேற்று அமைச்சர் ஜெயலலிதாவுடன் காலையும் மாலையுமாக இரு சுற்று பேச்சு நடத்தினார். மாலை நடந்த பேச்சை அடுத்தே உண்ணாவிரதத்தைக் கைவிட ஜெயலலிதா முடிவு செய்ததாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு லிப்டன் சந்தியில் ஒன்று கூடிய பெருமளவு ஊழியர்களே இவ்வாறு கோஷங்களை எழுப்பியதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கொழும்பின் பிரதான சந்திகளில் ஊழியர்கள் மறியல் போராட்டங்களையும் நடாத்தியுள்ளனர்.

இதேவேளை தொழிலாளர் பிரச்சினைக்கு உடன் தீர்வு காண அரசு தவறினால் சகல தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என வாசுதேவ நாணயக்காரா தெரிவித்துள்ளார்.

தமிழக

வெற்றி என்றும் தமது உண்ணாவிரதம் முழு வெற்றி அடைந்தது என்றும் ஜெயலலிதா மேலும் தெரிவித்தார்.

இதேவேளை காவிரி பிரச்சினை தொடர்பாக ஜெயலலிதா உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்ததையடுத்து இப்பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்த புதுடில்லி விரைந்த தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையிலான குழு பிரதமர் நரசிம்மராவை சந்தித்து பேச்சு நடத்தியது.

காவிரிப்பகுதிக்கு போதியளவு நீர் கிடைக்க ஆவன செய்யப்படும் என பிரதமர் தம்மிடம் உறுதியளித்ததாக வாழப்பாடி ராமமூர்த்தி பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 21-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10533

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9759, 26-0382, 28-9633, 24-4298, 24-5942
24-4895, 42 1178, 22-4473, 40-1516, 26-2414
28-4183, 28-2657, 26-6526, 27-0994, 26-6077

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-3476, 24-5241, 26-6796, 26-7663, 24-0416
42-1046, 28-8951, 26-5244, 28 1110, 24-6475
24-8429, 28-6020, 26-9755, 24-0415.